உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞான பரோட்ச சுகார்ஜிதம்.

சிவநேச செல்வர்கள ... த்தின்படி
ஸ்ரீ சிவசமயந்திந்துத் தொண்டுபூண்டொழுதும்
அடியார்களில் ஒருவரும்
வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச
சபப்பிரசங்க கோளரியும்,
சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை
அருட்கவி
சி. வை. பா. கங்காதர நாவலரென் றியற்பெயரமைந்துள்ள
"சிவஞானப் பரதேசியாரென்னும்"
சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்
இயற்றப்பட்டு

—)S(—

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியினால்
தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

48 - வது வருஷத்தின் திருப்பணியாக கலியுகாப்தம்
5029 க்குச் சரியானத் தமிழ் பிரபவ வரு பங்குனி மீ 22
சுவாமி சந்நிதியில் ஷெ. தேசிக சுவாமிகளால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1928 வரு ஏப்ரல் மீ 3 உ.

27 SEP
Q23:35.2111
N28

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

811
294.551

சென்னைத் திருமயிலை
ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞான பரோட்ச சுகார்ஜிதம்.

No.
27 SEP 19
MADRA

இஃது
சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி
ஸ்ரீ சிவசமயத்தீற்றுத் தொண்டுபூண்டொழுகும்
அடியார்களில் ஒருவரும்
வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச
சபாப்ரசங்க கோளரியும்,
சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை
அருட்கவி
கி. வை. பா. கங்காதர நாவலரென் னியற்பெயரமைந்துள்ள
"சிவஞானப் பரதேசியாரென்னும்"
சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்
இயற்றப்பட்டு

—)S(—

கையோப்பக்காரர்களின் நன்முயற்சியினால்
தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

48 - வது ௵த்தின் திருப்பணியாக கலியுகாப்தம்
5029 க்குச் சரியானத் தமிழ் பிரபவ ௵ பங்குனி ௴ 22 உ
சுவாமி சந்நிதியில் ஷி தேசிக சுவாமிகளால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1928 ௵ ஏப்ரல் ௴ 3 உ



3

175565

உ

சிவமயம்




திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞான பரோட்ச சுகார்ஜிதம்.

## விநாயகர் வணக்கம்.

—()—

சோட்சச்சீர் கழிநெடிலாசிரிய விருத்தம்.

பண் - நட்டராகம்.

—0—

பரம மஹத்வ பரமநீயேனல்.

சீர்நிலவும் பரமசுகா திதவடிவே ! திருவே !
சிற்பரதற் பரபொற்புய ரற்புத ஓம்ப்ரணவந்
திசழனந்த சொச்சொரூப லட்சண சாஸ்விதமாய்ச்
சேர்ந்தளவில் மகிமையெனு மஹத்வமலிந் தலைவிப்
பேர்நிலவுஞ் சின்மயமே ! பேசுதற்கு முடியாப்
பிரம வாரிதியேஞானப் பேரின்ப சாட்சியமே
பிறப்பிறப் பிலாதவனே ! பீடுறை யானந்தமே !
பிறங்குபல நிலையனைத்துங் கலந்து வொளிர்பவனே !

நேர்நிலவு நிறைநெறியு ணெருங்கி தவம்பலிக்க
நித்தியாப ரோட்சமெனு நிரதிசயா னந்த
நிட்டையொரு சிறிதும்வழா தவருளத்தி லிலங்கு
நிகரிலாப் பெருமானே! நிமல குணுதிபனே!
தேர்நிலவுங் கயிலையெனு மயிலைவள ரிறையாம்
ஸ்ரீகபா லீசன்றுதி பணிக்ககடைக் கணித்தாள்
தேவரெலாந் தொழுமுதலே தெய்வ சுகார்ஜிதமே
திருதியென வருகும் விநாயகமணியே நமவே. (க)

விணைநீக்கியாளும் விமலநீயெனல்.

ஆடல்புரிந் துயிர்களையுங் காட்டி விணைப்பூட்டி
அவையவையின் கன்மதன்ம வழியினனல் மூட்டி
அடங்காத வகங்கார மனம்போலந்தோ வாட்டி
அந்தகார மெனுஉம்பந்த மதனிலன்பு நாட்டி
நாடதனிற் சிறந்ததேவ நகரதனை யாண்டோ
னலிவுற்று நிலையற்று வலியிழந் தழுநாள்
கவிலரிய பிருகுதச்சு முனிவர் கருணையினு
னன்மைபெற செய்மகிமை யுணர்வதரி தலவோ?
பாட்டினைத்தும் விட்டவரே பக்குவ சாதனையிற்
பலுகிசுக மடைவரெனிற் பாபியின் கதியெனே?
பாலன்சிற நம்பியன்று பழந்தர வுண்டுகலைப்
பலவோத யருளியகே ருணர்தற் கெளிதலவே?
சேடன்றெழுங் கயிலையெனு மயிலைவள ரிறையாம்
ஸ்ரீகபா லீசன்றுதி பணிக்க கடைக்கணித்தாள்
தேவரெலாந் தொழுமுதலே தெய்வ சுகார்ஜிதமே
திருதியென வருகும் விநாயகமணியே நமவே. (உ)

விழிசாய்த் தருடரும் வித்தகநீயெனல்.

மூவுலகம் போற்றவரு முன்னவனென் றெழுந்து
முடிவிலா வுருகாந்து தேவரண்டர் முனிவர்
முயன்றதவப் படிசகல வரமுமளித் தவனே!
மோனப்பரஞ் சுடராக வொளிரும் புராதனனே
ஏவுத விலாதப்படி யெப்பொருளும் படைத்து
யெங்குநிறைந் தியம்பவொண கலமளிக்கும் வள்ளலே!
யெவைக்குந் தலைமைப்பொருளா யிருந்துசுக மளிப்போ
யெதிருத்தம் பேசுபவர்க் கெட்டாமறை வடிவே!

நர்விய வல்லாளனுக்காய்த் நர்லையாங் கல்யாணன்
சாற்றரிய வினையுட்பட தயைசெய்ததென் நயவோ ?
நற்றிமுகத் தடன்வலிகொண் டாற்றிய கயமுகன்
றலைசிவ க்ஞேசவேனத்தொழ பணியேற்ற தென்கொல்
சேவைசெயுங் கயிலையெனு மயிலைவள ரிறையாம்
ஸ்ரீகபா லீசன்றுதி பணிக்கக் கடைக்கணித்தாள்
தேவரெலாந் தொழுமுதலே தெய்வ சுகார்ஜிதமே
திருதியென வருகும் விநாயகமணியே நமவே. (௫.)

சித்திநிறைந்த தேவநீயெனல்.

அகிலகா ரண்மனோத்து ளமர்ந்துநடம் புரியு
மத்திமுக வுத்தமனே ! அளவுபடா தவனே !
அரஹரஓம் சிவசிவ கணேசநம வெனவே
அநுதினமும் போற்றிதிரு நீறணிந் தன்புசெய்வோர்
சுகிதுகியென் றொலிபரப்பு மிவையிரண்டுங் கருதாத்
தூயருள் மகலாத சூழ்ச்சியே ! சூக்குமமே !
தொல்லையெனுங் கதவடைத்துத் துரியநிலை மருவி
சொல்லரிய குண்டலிபா லமுர்தமுண்டு களித்து
இகமும்பர மவையொன்றென வெண்ணிகிட்டை யதனு
வென்றுமொரு படித்தாக விருப்பவர்க் கெளிதலா
வின்னலெனுங் கொன்னலாம் பன்னகம்வாய்த் தேரையா
யிளைத்தலுத்த கொடியனெங்கு தெரிந்தேசத்த வல்லவனோ ?
செகம்பணியுங் கயிலையெனு மயிலைவள ரிறையாம்
ஸ்ரீகபா லீசன்றுதி பணிக்ககடைக் கணித்தாள்
தேவரெலாந் தொழுமுதலே தெய்வ சுகார்ஜிதமே
திருதியென வருகும் விநாயகமணியே நமவே. (௬)

எல்லாம் வல்ல யீசநீ யெனல்.

எல்லாம் வல்ல வீசனுமா பெவைக்குந் தலைமையனு
யெழிலார்ந்த சுகபோக மியாவினுக்குந் துணையா
யியம்புகின்ற அகர வுகரமு மகரமெனுமு
மெழுத்தாகி மவ்வெழுத்து ளியக்கும் பரத்துவமாய்
வல்லாண்மை யதில்மிருந்து மாய்கைவழிக் கானாய்
மலைவுற்று நலமற்று மனமாகு மர்க்கடத்தின்
வால்பிடித்து நூல்படித்து மால்பிடிக்கத் தளர்ந்து
மாதவத்தோ ரோதிவைத்த சாதனையுட் படியாப்

பொல்லாதா னெனும்பெயர்க்கே பிறந்திடும் புலையேன்
புழுவுடல்விட் டேபிர்மறைமுன் புந்தி நிலைத்திடுமோ ?
பொய்மெயிரண்டும் வேண்டாப் புனிதர்களே சிறந்தோர்
போக்குவர வற்றநிலை புகல்வ தெனிதலவே ?
செல்வமெனுங் கயிலையெனு மயிலைவள ரிறையாம்
ஸ்ரீகபாலீசன் றுதிபணிக்க கடைக்கணித்தான்
தேவரெலாந் தொழுமுதலே தெய்வ சுகார்ஜிதமே
திருதியென வருகும் விநாயகமணியே நமதே. (௫)

எழுத்தறிந்தா ரின்புற்றரேனல்.

பழுத்தகனி யதற்குசுவை யதிக மனுபவம்போற்
மற்றற்று நின்றவரே பதியிற் கலப்பரெனப்
பகரரிய மறைசுருதி குருக்கள்முதற் பெரியோர்
பறைந்தவையே யெக்காலுஞ் சாட்சியமதாய் நிலைக்கும்
புழுத்தவுடற் றனைவளர்த்து புத்தியதை நீங்கிப்
பூத்துதிரும் பூவானேன் பொய்யல்ல வுண்மையதே ?
போங்கால மவைவருமுன் புண்ணியா நின்னடியவரைப்
போற்றியவர்ப் பணிக்கடிமை யாக்கிலன்று பிழைப்பேன்
எழுத்துவழக் கன்றியிவ ணெதிர்ப்படும் வழக்குள
தெனலவை யாபாசமல்லா லிவைமுற் காலத்துளதா
யெடுத்துரைத்த மொழிசான்று யிருப்பதிதை மறப்பா
ரெளியனைப்போ லறிவிலிக ளெனமுது மொழிசொலும்
செழித்ததவக் கயிலையெனு மயிலைவள ரிறையாம்
ஸ்ரீகபாலீ சன்றுதி பணிக்க கடைக்கணித்தான்
தேவரெலாந் தொழுமுதலே தெய்வ சுகார்ஜிதமே
திருதியென வருகும் விநாயகமணியே நமதே. (௬)

விக்கினந்தீர்க்கும் மெய்க்கடவுணீயெனல்.

எத்தவங்க ளெய்திடினு மியாவினுக்கு முதல்வ
னெனவுனை யேத்தாதவர்க ளிலையெனு முதுமறை
யெழிலுணர்ந்து பழியகன்று விழியும் வழியடைந்தோ
ரெல்லவரு நல்லவர்தா னென்போற்பாவி யெங்குளார் !
சுத்தமதி யதில்விளங்குந் தூய்யமறைப் பிழம்பே !
சொல்லாமற் சொல்லவருஞ் சூக்கும வக்கரமே
தூரமென்று பலதிசையு மோடியாடி யலுத்த
சுணங்கனிலுந் தாழ்வுடைய சோம்பனெங்க னுணர்வேன்

மத்தகய மெனவேதிரிந் தலைந்துவலி பேசி
மலைத்தபெரு மூடனெக்கை விடிலையயோ கெடுவேன் ?
வணங்கியமெய்த் தொழும்பர்களின் வினையைப் பொடியாக்கி
வாழ்வளித்த தற்பரனே மாவிக்கினேச் சுரனே !
சித்தர்பணி கயிலையெனு மயிலைவள ரிறையாம்
ஸ்ரீகபா லீசன்றுதி பணிக்கக் கடைக்கணித்தாள்
தேவரெலாந் தொழுமுதலே செய்வ சுகார்ஜிதமே
திருதியென வருகும் விநாயகமணியே நமவே. (எ)

கருத்தைத் திருத்துங் கணபதி நீயேன்ல்.

உருத்தரித்த நாள்முதலா யுணவுக் குழைத்ததலா
லுன்பணிக் கொருசிறிது முதவாச்செய லுடைய
வொதிமரத்தை வைத்திருப்ப ததிலென்பய னப்பா
வொழித்துவட லழித்துமண் ணிலொடுக்கச்செய் புண்ணியங் [காண்
கருத்தெனூஉ நிலந்திருத்தி யறிவெனூஉம் பயிருங்
களிப்புறநி னருளெனூஉம் மழைப்பொழிதல் வேண்டும்
கரணமொடேங் கிழேழ்வினைக் கடந்திடும் பந்தமெல்லாங்
கட்டோடே கருணையெனுந் தணல்பட் டெரிந்துவிடுஞ்
பெருத்ததன மெனுமிரண்டு புலிவாய்க் குணவாகிப்
பேய்ப்போல விழிக்கின்றேன் பெரிதுணராப் பேதை
பின்முனறி யாதலைவேன் பிழைபொறுத்தா லன்றி
பிரபஞ்ச வாதனைவிட் டேறேன் றெரிந்ததுவே ?
திறத்தமுறங் கயிலையெனு மயிலைவள ரிறையாம்
ஸ்ரீகபா லீசன்றுதி பணிக்ககடைக் கணித்தாள்
தேவரெலாந் தொழுமுதலே தெய்வ சுகார்ஜிதமே
திருதியென வருகும் விநாயகமணியே நமவே. (அ)

ஏகவுருவமே யீச்சுரமயமேன்ல்.

ஆகமங்கட் பலவுளது வவையிற் சைவாகமமே
அரும்பொருளென் றறிந்தவர்க ளவைவழா நெறிகொண்டு
ஆசாரம் மந்திரஞ்சேபந் தியானம்பணி யுஞற்றி
அன்புதவ மருளடைந்து வனித்தியவூ ழகன்றூர்
ஏகனுமாய்ப் பலவுமா யிவையுள் முக்கடவுள
ரெனலுமவை முத்தொழிலோ டைந்தரு வக்கரமா
யிசைத்திடும் பற்பலகோடி யெனவேறா லுரைத்திடு
மிச்சைவழி யாமிவைக ளின்றியுண்மைத் தெரிய

மோகமுயர் போகமவை விட்டவர் கட்டுபெட்டார்
முத்தியெனும் வாழ்வடைந்தார் மூலமறைக் கலந்தார்
மோசமு மாபாசக்கடல் மூழ்கினவர்ப் பிழையார்
முப்பாழுக் கப்பாலாய் முளைத்தெழுங் கனியே!
தேகம்போமுன் கயிலையெனு மயிலைவள ரிறையாம்
ஸ்ரீகுபா லீசன்றுதி பணிக்கக்கடைக் கணித்தான்
தேவரெலாந் தொழுமுதலே தெய்வ சுகார்ஜிதமே
திருதியென வருகும் விநாயகமணியே நமவே. (௬)

## சொரூப வரூப சூட்சிநீயெனல்.

அகத்தியர்முன் காகமென வுருகரந்த தென்கொல்?
ஔவையரைத் துதிக்கையினு லெடுத்தடுத்த விதமென்
ஆயனுக்கு சிருட்டித்தொழி லவையறிந்த முறையெ
னரிநாரா யணரரவ வடிவ மகற்றினதென்
இகத்திலுற வதுமலிந்த தெனலவையென் ராக்கத
ரிடுக்கணவை களையொழித்து மூவுலகைக் காத்தி
பிமையவர்க ளிருடியர்கள் முனிவர் மெய்த்தொழும்ப
ரென்று மறவாதவர்மு னெழுந்தபல கோலஞ்
சகத்தின்மய லதிற்சிக்கிஞேர்த் தெரிய வசமுளதோ?
சித்திபுத்தி பத்திமுத்தி சிறக்க வளிப்பனே!
சிந்தையறிந் துதவுமபர னெனிகரோர்ப் பொருளை
தேடிமனம் வாடிடினுஞ் சேரிதல்முன் புண்ணியமே
திசமுநலக் கயிலையெனு மயிலைவள ரிறையாம்
ஸ்ரீகுபா லீசன்றுதி பணிக்ககடைக் கணித்தான்
தேவரெலாந் தொழுமுதலே தெய்வ சுகார்ஜிதமே
திருதியென வருகும் விநாயகமணியே நமவே. (௭)

—0—

## நாமாவளி.

ஓம் – அரஹர சிவசிவ கணபதியே ஓம் –
வரந்தா வருகுங் குணநிதியே (௧)

ஓம் – பிரணவ மந்திர பதித்துவமே – ஓம்
சரணஞ் சரணம் நிதித்துவமே. (௨)

ஓம் - கருணையங் கடலே கதிர்யே - ஓம்
அருடந் தாள்வாய் துதிசியே. (௩)

ஓம் - பஞ்சாக்கர பரி பூரணமே - ஓம்
நெஞ்சி னடஞ்செயு மாரணமே. (௪)

ஓம் - சித்தியும் புத்தியுந் தருபவனே - ஓம்
பத்திசெ யுத்தமர்முன் வருபவனே. (௫)

ஓம் - வினையெல்லாந் தீர்க்கும் விநாயகனே - ஓம்
தனைநிக ரொன்றில்லாத் தாயகனே. (௬)

ஓம் - பாசபந்தமதை விட்டாரே - ஓம்
பூசைசெய் துன்கழல் தொட்டாரே. (எ)

ஓம் - அன்பே சிவமெனத் தெரிந்தாரே - ஓம்
துன்பொழிக் துன்பணிப் புரிந்தாரே. (அ)

ஓம் - சகலலோக சர ணனவனே - ஓம்
இகமுணர்ந் தவருணுந் தேனவனே. (௯)

ஓம் - பற்றறுத் தொண்டர்கட் பாவேரே - ஓம்
சுற்ற மவர்களெனக் கூடுவேரே. (௰)

ஓம் - பொய்மெய்யு மற்றூர்ப் புண்ணியரே - ஓம்
மைவினை யணுகார் கண்ணியரே. (௰௧)

ஓம் - வெண்ணீ றணிந்தோருரு பார்ப்பாரே - ஓம்
கண்மணி யாற்பவந் தீர்ப்பாரே. (௰௨)

ஓம் - ஆசையோ டரன்பணிக் குழைப்பாரே - ஓம்
ஈசனென் றுமவர்முன் தனழைப்பாரே. (௰௩)

ஓம் - திருத்தொண்ட ரிடந்தேவர் வருவாரே - ஓம்
கருத்தைத் திருந்திமுத்தி தருவாரே. (௰௪)

ஓம் - பேதமற் றவரெல்லாம் பெரியவரே - ஓம்
சாதனை நிலைத்தவ ரரியவரே. (௰௫)

ஓம் - மயிலையே கயிலை யானதுவே - ஓம்
நயம்பெற துதிவினைப் போனதுவே. (௰௬)

ஓம் - தவப்பிர காசர்மிடி வெல்வாரே ஓம்
சிவப்பிர காசன்துதி சொல்வாரே. (௰எ)

—()—

ஓம் நமப்பார்வதிபதயே நம: அரஹரா மஹாதேவா ஓம்

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்.

## நூல்.

---

## சிவமே சிறந்ததென சேவை செய்தேத்தல்.

—)§(—

காப்பிய கலித்துறை

தவந் தானஞ் செய்தமெய் சாதுக்களேத்த தழைத்துமெய்
நவந் தானே செய்துள நாளு நடஞ்செயு நம்பனை
அவந் தானே போக்கிடு மாப்பர்க ளல்லோ வருளுடன்
சிவந்தானே யாவுமென் றேத்தினோர் சிந்தைத் தெரிமினே.

—)§(—

பண் - இந்தளம். நாலடிமேல் வைப்பு.

—)§(—

அருளாளர்கள் பணியுமென தப்பனே ! வொப்பிலானே
மருளாளனுய்ப் பவக்காடதில் மயங்கி யென்றாந்தியங்கி
பொருளாளர்பின் வாளாய் நாளைப் போக்கி வினைக்காளாக்கி
திருவே யுனையடைந்தே னருட் செய்வாய்ப் பரஞ்சுடரே
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவா கபாலீசமா மஹேசா வரமருளே. (க)

எந்தாயுனை யல்லாலொரு யிறைவர்தனைக் காண்கிலேன்
மைந்தனுநா னல்லவோ யிதைவசனிப்பதென் பயன்காண்
பந்தமற வந்தேநலம் பணிப்பாய் பதிகணிப்பாய்
சிந்தாகுலந் தீர்த்தாண்டருள் தெய்வ சுகார்ஜிதமே
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவாகபாலீசமா மஹேசா வரமருளே. (உ)

பத்தருள மலைநீங்கிடாப் பணியே தெய்வக்கனியே
முத்தொழிற்செய்முதல்வாயேழை முறையானதைக்கேட்டருளே
சத்தேயொழிந் திடுநான் தனை தரணிவிலியா ருளர்காண்
சித்தமகிழ்ந் தடியன் றுயர்த் தீர்த்தாண்டருட் சிற்பரா
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவாகபா லீசமா மஹேசா வரவருளே. (௩)

மகிழ்வாயன்பர் மலர்த் தூவியே மந்திரந் தனைச்சாற்றிப்
புகழ்ந்தே மணிகிலுக்கிசதா போற்றுவர்ப் புண்ணியரே
தகைமையிலாச்செடியன்பொல்லா கொடியன் றனைத்தாங்குவதியார்
செகமே பணிச்செயுந் தேவனே திவ்ய மனோரதமே
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவா கபாலீச் மாமஹேசா வரமருளே, (௪)

ஐவரெனும் புலிவாய்க் கடிப்பட் டந்தோ வயர்ந்தழுதேன்!
பொய்யானதை மெய்யாயெண்ணும் புலையேன் நிலைப்படுநா
ளையாயெனைப் பெற்றவனே யாருளரே நின்கருணைச்
செய்யாவிடிற் பிழையேன்றொழாச் சிறியேன் றனை யாளுதியோ ?
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவா கபாலீச மாமஹேசா வரமருளே. (௫)

வானோர்ப்பணி செயுஉம் சர்வவ ல்லப் பகாப்பதமே
ஏனோயெனைப் படைத்தாயென்று லென்னப்பயன் கண்டாய்
மானேர்விழி யுடையாரிடம் வலிதுகொண்டேன் றெரிவாய்
தேனேயின்பக் கனியே கனிரசமா யுண்ணத்தெரியேன்
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவா கபாலீச மாமஹேசா வரமருளே. (௬)

கங்கைமங்கை கொன்றைமலர் கையில் மழுமானுந்
தங்கும் பெருமானே தயாபரனே சதுரிதனே !
யெங்கோடியே மறைவேனெம னெதிரத்தே பாசம்விடுநாள்
திக்கட்சடை யுடையாயுண்மை செப்புவாயிது ததியே
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவா கபாலீச்மா மஹேசா வருமருளே. (௭)

முப்பாழுக் கப்பாலாய் முளைத்தெழுஉ முதலோனே
எப்பாரினு நினையன்றியொன் றிலையென்றென மறைசொல்
இப்பாரினி லேழைப்படு மிடுக்கணை நீக்குவரியார்
செப்பர்க் கரியவனேதொண்டர் சேவைசெய்ய மகிழுந்

தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவா கபாலீசமா மஹேசா வரமருளே. (அ)

எல்லாம்வல்லப் பொருளேதேவ ரிடரானதை யழித்தாய்
பொல்லாச்செய லுடையேன் வினைப்போக்கிடு நாளுளதோ
மல்லாடிடு மனமாகிய மர்க்கடத்தின் வழியே
செல்லாப்படி நலஞ்சந்திட சேவடி நம்பினன்மெய்
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவா கபாலீசமா மஹேசா வரமருளே. (கூ)

மன்னும்பல வுருவாகிய மகிமையெங்ஙனுணர்வேன்
பொன்னுமங்கைப் புவியாசையிற் புதைந்தே யுள்ளஞ்சிதைந்தேன்
கன்மமதுக் கொண்ட தேகங் கடக்காமுன சீர்க்கணிப்பாய்
சின்மயனே சிறியேன்றுயர் செவியுட்கேட்க விலையோ ?
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே.
வாவா கபாலீசமா மஹேசா வரமருளே. (ய)

மறையோர்ந்துள மாழ்கதவ மலிந்தாரு ளடைந்தார்
குறையேநிறை குணக்கேடனின் குற்றம் பொறுப்பவரியார் ?
பிறைபோலுருக் குலைந்தேபலப் பிணியால்மனங் கசிந்தேன்
திறைநீக்கியு ளருச்சா[illegible] சிறியேன் பிழைத்திடுவேன்
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவா கபாலீசமா மஹேசா வரமருளே. (யக)

கண்டந்தனில் விடமேகொண்ட கருணாகர மூர்த்தி
பண்டவினை யென்னேயென்றன் பரிதாபம் பார்த்திருக்க
கொண்டசாப மென்னேயேழைகொடிய வினைப்போக்க
தெண்டனிட்டே வழுதேபாதஞ் சேவைசெய்தே னரனே
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவா கபாலீசமா மஹேசா வரமருளே. (யஉ)

ஆடிப்பறப் பதைப்போலையோ அவனியினி லுணவுக்
கோடியோடி யுழைத்தேனிவை யுண்மைமறை வல்லவே ?
நீடித்திடு மெனவேகொண்ட நினைவுபொய் யானதவே
தேடிதொழு கலமீந்தருட் செய்வாய் மாபுண்ணியமே
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவா கபாலீசமா மஹேசா வரமருளே. (யங)

பிறந்தப்பிறவிகளி லென்போற் பேதையெவ ருளர்காண்
மறந்தேனுந்தன் றிருத்தாளதை மன்னித் தருட்புரிவே

துறந்தா ருணதருளே வழித்துணையாய்த் தூயரவரே
சிறந்தவ முடையாரென் றுஞ் சேவைசெய்யும் பரமே
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவாகபா லீசமா மஹேசா வரமருளே. (௰௪)

நெறிநேர் பக்தியுடனேசதா நினைத்தார் நல்லமனத்தார்
குறியுங் குணமில்லாதவக் குன்றே தயைசெயின்றே
அறியுந் திறமென்பாலிலை யறிவாய்ப் பழம்பொருளே
சிறியேன் சிவப்பிரகாசன் றமிழ் சிந்தையுவந் தருள்வாய்
தேவேதிரு மயிலைவளர் சிவமே ஞானதவமே
வாவா கபாலீசமா மஹேசா வரமருளே. (௰௫)

—()—

## சிவஞான சாதனச் சிந்தைதரவேண்டல்.

—)(—

## அபய விண்ணப்பம்.

காப்பிய கலிநிலைத்துறை.

சருவா திக்யமுஞ் சமஸ்த லட்சணமுந் தகைசேர்ந்த
கருணா திக்யமெய்க் கடவுளா யுடலுக்குள் கலந்துவாழ்ப்
பெருவா திக்ய சிவஞான சாதனம் பிறங்குநிலை
யருளா திக்யசீ ருளெனவே வடிதொழு தேத்தல்.

—)S(—

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.
பண் - நட்டராகம்.

எண்ணிலா வுருவமுட னடியர் முன்ன
மெழுந்தருடஞ் செய்தவனே! வினையொன் றின்றி
புண்ணியம்போ லகிலமெலாம் போற்ற நின்ற
பூரணமே! காரணமே! புனித ஞானக்
கண்ணேகண் ணுளியதுவாய்க் கலந்து நின்றக்
கடவுளே! மயிலை கபாலீச தேவே!
அண்ணலே! மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயர் தானே. (௧)

மெய்யெனூடம் புன்குரம்பை மெலிந்து வாடி
வேதனையுஞ் சோதனையும் பாத கத்து

மையகோ ஊாந்துவுயிர் மாற முன்னே
  வாட்கொண்டாற் குறைவருமோ? அழக தாமோ?
தெய்வீகத் திருவுருவே தேவர் மூவர்
  தேடநின்ற மயிலை கபாலீச தேவே!
ஐயனே! மறவாதஞ் சலிசெய் தேத்த
  அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௨)

கருணைவளர் கற்பகமே! கலைகட் கெல்லாங்
  கடந்தொளிரும் பரம்பொருளே கருத்துக் கெட்டாப்
பெருமானே! பேரறிவே! பேரானந்த
  பெம்மானே! யெம்மானே! பிரபஞ் சத்தி
லுருகொண்டப் பொருளிலெலா முயிராய் நின்ற
  வுயர்வரையே! மயிலை கபாலீச தேவே!
அரும்பொருளே! மறவாதஞ் சலிசெய் தேத்த
  அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௩)

சத்தாகி சதசத்தாய் சமஸ்த ரூப
  தத்துவமாய் சார்ந்தநிலைத் தழைத் துலாவி
சித்தாகி சித்தியெட்டுட் சிறந்த தாகி
  சிற்பரமாய்த் தற்பரமாய் செனன மில்லா
வத்தாகி வத்துவெலாம் வழங்கி காக்கும்
  வள்ளலே! மயிலை கபாலீச தேவே!
அத்தனே! மறவாதஞ் சலிசெய் தேத்த
  அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௪)

கமழ்கின்ற கடிமலருட் கலந்து வாசங்
  காட்டிநின்ற மாய்கையதைக் கண்டோ ரெல்லாந்
தமனியமுஞ் சடருமொன் றுஞ் சாட்சிக் கண்டு
  தனையெடுத்து சாத்துதற்கு சங்கைக் கொண்டார்
நமசிவய வெனநீறுப் பூசிப் போற்று
  நம்பியர்வாழ் மயிலை கபாலீச தேவே!
அமலனே! மறவாதஞ் சலிசெய் தேத்த
  அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௫)

சோதியனே! சூக்மயனே! தொந்த பந்தந்
  தொடர்பிலாத் தனிமுதலே சூட்சா சூட்ச
நீதியனே! நித்தியனே நிகரொன் றில்லா
  நின்மலனே! நிட்களனே! நினைத்தை யேற்ற

பேதித்த பேயனுன்றன் பெருமை தன்னைப்
　பேசவனே? மயிலை கபாலீச தேவே!
ஆதித்ய மறவாதஞ் சலிசெய் தேத்த
　அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௬)

ஒப்பிலா மறைப்பிழம்பே! வுலகந் தன்னை
　வோக்காள மென்றுரைத்து வுதறிப் போட்டு
தப்பிலியாய்த் தலையாட்டித் திரியு நெஞ்சை
　சமத்துவமாய் வழிப்படுத்தி நிட்டை யாலே
மூப்பாழுக் கப்பாலே முதிர்பா லுண்ணு
　மோனமுறை? மயிலை கபாலீச தேவே!
அப்பாலு மறவாதஞ் சலிசெய் தேத்த
　அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௭)

குறைபிழந்த யிடமதிலே குணங்கொள் வானே!
　கொற்றவனே! நற்றவமே! கோதில் லானே!
மறைபிறழா வணமறகாற் பூசை நோன்பு
　மன்னநின்ற மெய்த்தொழும்பர்க் கூட்டந் தன்னி
னிறைவழுவாப் படிக்கூடி வாழ்க வென்பா
　னினைகுவையோ? மயிலை கபாலீச் தேவே!
அறைகுதல்போல் மறவாதஞ் சலிசெய் தேத்த
　அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௮)

எக்கலைக்கு முன்னவனு யிருந்த லாவு
　மெழிலதனை மூடன்சொல வெளிதோ சொல்வாய்?
மூக்குணமுத் தொழிலுடன்மும் மூர்த்தி யாகி
　மூதண்ட கோடிகட்கு முதல்வ னாகி
சிக்குபடா மனச்சேட்டைத் திமிரம போக்குந்
　தெய்வீக மயிலை கபாலீச தேவே!
அக்கரத்தை மறவாதஞ் சலிசெய் தேத்த
　அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௯)

தூபதீப நைவேத்யம் மந்த்ரம் யாகம்
　சொல்லாமற் சொல்லுந்தரு வாக்கிய நிட்டை
சோபமற்று நிலைப்பரவுந் தியானம் மௌனம்
　சுசுரூப தந்திரமிவைத் தொடர்ந்து நின்றோர்
தாபமுற்று கண்பேர மானந்தங் கொள்
　தாயகனே! மயிலை கபாலீச தேவே!

ஆபத்திலு மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௰)

தனிமறையே ! சாஸ்விதமே சகஸ்ற்றிர ஞான
சத்துவமே ! சத்தியமே சாந்தமே யூழ்ப்
பனிநீக்கும் பகலோனே பக்தர் மீது
பட்சங் கொண் டாதரிக்கும் பரிசினனே
கனியினுளே மதுரமெனக் கலந்து நின்றக்
கண்ணுதலே ! மயிலை கபாலீச தேவே!
அனித்தியத்து மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௰௧)

கல்லாதப் பேர்களையே நல்லோ ரென்றக்
கருதிமுன்னா ளெழுதிவைத்தார்க் கருத்தி யென்னே ?
மல்லாடிப் பலகுதர்க்க வாது பேசி
வழக்கிடற்கோ ? மௌனநிலை வாய்ப்ப தற்கோ ?
வல்லாள மனக்குரங்கின் மயக்கை விட்டோர்
வணங்கவரு மயிலை கபாலீச தேவே !
அல்லலிலு மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௰௨)

நிலைப்பிறழாப் பெரியோரே நல்லோர் நல்லோர்
நினைவெல்லாஞ் சிவமயமாய்த் தோன்றக் காண்பார்
கலைப்பிறழா நெறிநிற்கக் கற்றோர்க் குள்ளே
கனகமென வொளிகிளரும் பரமாய்த் தோன்றி
மலைப்புமிலா வுண்மையொன்றால் மதிப்பா னுணர்
வணங்குவர்வாழ் மயிலை கபாலீச தேவே!
அலைச்சலினு மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௰௩)

பன்னகம்வாய்த் தேரைபடும் பாடு போலும்
பலசோலிக் கொண்டலைவான் பாபம் போலுங்
கன்னல்மிகுங் கரும்பாலையிற் கசிதற் போலுங்
காலனெனுங் காலமுண் ணுங் கடத்தைப் போலும்
மன்னுயிர்மே லிதக்கமிலான் மனதைப் போலும்
வாழார்வாழ் மயிலை கபாலீச தேவே!
அன்பினல் மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௰௪)

ஒப்புயர்வில் லாதவனே ! ஓதும் வேதத்
துயர்முடிவே ! பரஞ்சுடரே ! வுத்த மர்கள்
செப்பிசதா யிணக்கமுடன் வணக்கங் கொண்டு
சிந்தையெனுங் கோயிற்குள்ளே ஸ்திரமாய்க் கண்டு
முப்பொருளின் முடிவிற்கலந் தென்றும் வாழ்வார்
மூத்திதரு மயிலை கபாலீச தேவே !
அப்பனே ! மறவாதஞ் சலிசெய் தேத்த
அருட்டருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௫௫)

சந்திர சூரியனக்னி யிவைக் கண்ணகத்
தானுருகொண் டியாவினையுந் தாங்கு காதா !
மந்திர சொரூபமேபொய் மயக்கி லாழ்ந்து
மலத்திருக்கி னுண்மைக்காண வசம தாமோ ?
சுந்தரமே ! ஜோபிதமே ! தொண்ட ருக்குத்
துணைவருகு மயிலை கபாலீச தேவே !
அந்தியிலு மறவாதஞ் சலிசெய் தேத்த
அருட்டருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௫௬)

பண்புடையோர்ப் பணிவுடையோர் பக்திசெய் தோர்
பார்மயலை விரும்பாதோர் பாசமற் றோர்
புண்ணியத்தை விழைந்து வுள்ளம் பூரித்தோர்கள்
பூரண வானந்தநிலைப் பொருந்தி னோர்கள்
வெண்ணீறுப் பூசிநலம் விளங்கு மேலோர்
விரும்பிதொழு மயிலை கபாலீச தேவே !
அண்ணலே ! மறவாதஞ் சலிசெய் தேத்த
அருட்டருவாய்ப் பூங்கழற்கு வயபந் தானே. (௫௭)

தற்பரமாய் சிற்பரமாய் தாயுந் தந்தை
சனனமுடன் மரணமென்ப திவை யில்லாது
விற்பிரம்பு பட்டவுடன் மாயமான
விஞ்சைமலி வித்தகனாய் விளையாட் டெய்தி
கற்பசுவும் பால்சொரியக் கண்டக் காட்சி
காண்பதெங்கான் ? மயிலை கபாலீச தேவே !
அற்பனுனை மறவாதஞ் சலிசெய் தேத்த
அருட்டருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௫௮)

கோத்திரமுங் குலக்குறியு நாம ரூபங்
கொண்டெழலுங் கடவுளெனுங் கொள்கை யின்றி

சாத்திரங்க ளளவில்லாத் தன்மை பேச
தானமைந்த சமர்த்துவத்தை யாரோ காண்பர்
சூத்திரக் கயிரற்று விழாமற் காக்குந்
தூயர்கள்வாழ் மயிலை கபாலீச தேவே!
ஆத்திரத்து மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௰௯)

அஞ்ஞான மெய்ஞ்ஞான மென விரண்டா
லலக்கழிந்து மனம்புத்தி சித்தத்தோடு
விஞ்சையிலா வகங்காரங் கன்ம தன்மம்
வீதிமதிபொய் மெய்யெனவே விருதுகூறி
துஞ்சிடுமுன் பதித்துவத்திற் பற்றுள்ளோர்கள்
துணிந்துதொழு மயிலை கபாலீச தேவே!
அஞ்சிடுமுன் மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௨௰)

சாக்கிர சொர்ப்பனஞ் சுழுத்தி துரியாவஸ்தைத்
தானறிந்துட் கலந்துநிலைத் தன்னைக்கண்டு
வாக்குமனக் காயமொன்றாய் மன்ன நின்று
வாய்ப்பேசா மௌனமது வாய்ப்ப தெங்கான்?
போகவுவர வில்லாதப் புனித ஞானப்
பூரணமே! மயிலை கபாலீச தேவே!
ஆக்கிடினு மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயஞ் சானே. (௨௧)

ஒன்றாகிப் பலவாகி வுண்மை யாகி
ஓதுகின்ற வாகமமும் புராண கீத
நன்றாகி ஞானஞேய நறவு மாகி
நாதாந்தப் பொருளாகி நாள் கோளாகி
மன்றுளிலே நடம்புரியும் வள்ளலாகி
மாசிலா மயிலை கபாலீச தேவே!
அன்றுடம் மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௨௨)

பிந்துகலை நாதமுன் நினுக்கு மெட்டாப்
பிரணவ பஞ்சாக்கரமே ஐம்பத்தொன்று
வெந்திரியந் தனிலமைத்து யெண்ணற் கொண்டு
யிசைந்த தெய்வ வுருகண்டு சிதம்பரச்சீ

ரந்தரத்திற் கண்டுதொழு மறிஞர் ஞான்று
மணுகிதொழு மயிலை கபாலீச தேவே!
அந்தியினு மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௨௩)

வாசியெனுங் குதிரையின்மேலேறிக் கொண்டு
மனவனத்திற் சாரிசெய்து வாய்த் திறந்து
பேசியும் பேசாதமௌனப் பெட்டிக் குள்ளே
பிடாரனின்பாம் படங்கும்வண்ணம் பெரிது கொண்ட
தேசிகரே தெளிவரெனச் செப்பு நூற்கள்
சித்திநிறை மயிலை கபாலீச தேவே!
ஆசின்றி மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௨௪)

காரண காரியங்கடந்து நிலைப்பெற் றோங்குங்
கண்ணியரே! புண்ணியர்கட் காண்பா ருண்மை
பூரணவாழ் வதன்வழியிற் பொருந்தி நின்றோர்
பொய்மெய்யும் புகழிகழ்ச்சி யொன்றும் வேண்டார்
மாரணமென் றுரைமரணச் சிந்தை யில்லார்
மஹனியர்சூழ் மயிலை கபாலீச தேவே!
ஆரணநேர் மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௨௫)

எல்வாமுன் கருணையென வெண்ணி யெண்ணி
யிரவுபக லொழியாதுச் சிந்தை வைத்த
நல்லவரே நல்லவர்க ளிவை யில்லாத
நாயினுக்குக் கேடாக நலிந்து கெட்ட
பொல்லா தவனெங்ஙன் பிழைப்பே னப்பா
புனிதநிறை மயிலை கபாலீச தேவே!
அல்லலிலு மறவாதஞ் சலிசெய் தேத்த
அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௨௬)

கருணைமலிப் பரஞ்சுடரே! கண்ணே விண்ணே!
கருத்திலடங்காப் பொருளே கரண மோய்ந்தோர்க்
கருவுருவா யவையிரண்டு மில்லாப் பூர்ண
வானந்தப் பேரறிவே அன்பு தானே
திருநிறையுஞ் சிவமௌனவே செப்பும் வேதத்
திகழ்பவனே! மயிலை கபாலீச தேவே!

அருமையுடன் மறவாதஞ் சலிசெய் தேத்த
  அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (உஎ)

கற்புள மங்கையருந் தன் கணவனன்றிக்
  கருத்திலெணு நினைவதுபோற் காண் பூதம்
பொற்புளதா யமைந்துள்ளம் பூரித் தென்றும்
  பூரணமாய் சிவமன்றி வேறென் றன்னு
கற்குணத்தோர் வேறுதெய்வம் காட்ட மாட்டார்
  நறவொழுகு மயிலை கபாலீச தேவே!
அற்புதத்தை மறவாதஞ் சலிசெய் தேத்த
  அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (உஅ)

துருவடிவே சிவவடிவாய்க் கூறும் லேதக்
  குணங்கொண்டார் ஞானமலர் மணமுங் கண்டார்
பெரும்பயனை யிழந்துவிட்டுப் பேசு வோரிற்
  பேய்க்குணமே மேலென்றுப் பெரியோர் சொல்வார்
கிருபையிலான் மதிவிதியு மிருந்த தென்னே?
  கீர்த்திநிறை மயிலை கபாலீச தேவே!
அருணிதியை மறவாதஞ் சலிசெய் தேத்த
  அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (உகூ)

அன்னியமுஞ் சொந்தமெனு மிவை யிரண்டே
  மந்தியத்தி னுதவியொன்று மாக மாட்டா
மன்னரிலாக் குடியதனால் வளமை யுண்டோ
  மணங்கொள்ளான் வாழ்வுந்தவம் வகுப்ப துண்டோ
இன்னலுற்ற செய்கையினு லின்ப மேது
  யெழில்மலிந்த மயிலை கபாலீச தேவே!
அன்புடனே மறவாதஞ் சலிசெய் தேத்த
  அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (ங௰)

பிணிமூப்பு நரைதிரையும் வருவ துண்டு
  பிறந்தவுடன் மறைவதுண்டு பெருநா ளுண்டு
திணிகொண்டு பலநிலைகட் செய்வ துண்டு
  செனித்ததெல்லாம் மறைந்ததன்றி திறமாய்ப் பேச
மணியாரும் வகையிலையேல் வசன மெற்கு
  மாண்பிலகு மயிலை கபாலீச தேவே!
அணியாரு மறவாதஞ் சலிசெய் தேத்த
  அருடருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (ஙக)

செகசீவ பரமெனவே தெளிவு கொண்டு
 செப்பினயிம் மூன்றுமொன்றி லடங்கும் வேளை
யிகபர சாதனையிவைக ளொன்றாய்ப் போகு
 மிரவுபக லற்றநிலை யெளிதாய்க் கூடும்
புகலுமொழி யவையடங்கிப் போகும் ஞானம்
 பூர்க்குமெனு மயிலை கபாலீச தேவே!
அகலாது மறவாதஞ் சலிசெய் தேத்த
 அருட்டருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௩௨)

நவமிகுந்த பரம்பொருளே! நாதா! போதா!
 நட்டாற்றி னட்டகம்பம் நிகரா தாக
அவமிகுந்த வசடனின் விண்ணப்பங் கேட்டு
 ஆண்டருள வேண்டிகண் கசிந்து சாற்றுஞ்
சிவப்ர காசன்பண் கேட் டாதரிக்க
 சேவித்தேன் மயிலை கபாலீச தேவே!
அவமகல மறவாதஞ் சலிசெய் தேத்த
 அருட்டருவாய்ப் பூங்கழற்கு வபயந் தானே. (௩௩)

——()——

சிவ நிலைத் தெரிந்தார் தேவ ரென்னலால்
அவ நிலைக் காட்பட்டா தாளுமென் றிரைஞ்சல்.

——)(——

## விஞ்சைமணியார்ப்பணம்.

காப்பிய கலிநிலைத்துறை.

வானுடன் மண்ணு மொன்றென நிறையும் வள்ளலே!
தேனமர்ச் சடையாய் திரிபுரந் தணற்படச் செய்தவா!
மோனமுந் தியானமு முகிலெனச் சூழ்ந்துள மூழ்கவே
யீனனை யாட்கொளி லின்பம்வே றிலையென விறைஞ்சுதல்.

——)§(——

எழுசீர்க் கழிநெடி லாசிரிய பஞ்சதுணித விருத்தம்.

பண் - கொல்லி - இசைக்கொழிப்பு.

———

மறைவடிவே மஹனீயர் மனவளமே கருணைசெய்
 மகத்துவனே சிவஞான வாக்கியமே!
நிறைபொருளே யாவினு னின்றவனே கருவழி
 நெருங்கிடாமற் றிருவிழி சாய்த்தருளே

குறையனைத்தும் பொடிசெய்தாள் குணக்குன்றே திருவடி
கும்பிட்டா ரியாவருஞ் சுகமடைந்தார்
கறைகண்டா ? கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே ! நினடியரைக் கார்த்தருளே. (௧)

மண்ணும்விண்ணு மொன்றென மலைவடிவாய் நின்றவுன்
மாட்சிமலிந் திடுஞ்சூட்சக் காட்சிதனை
எண்ணரிய தேவர்க ளிருடியர்கள் முனிவர
ரேத்திநின்று ரிடர்வழி தனைவென்றார்
தண்ணளியே தயைசெயி லொருதுயரும் வந்திடா
சனனவழி யதைதடுத் தாட்கொளுமே ?
கண்ணுதலே ! கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே ! நினடியரைக் கார்த்தருளே. (௨)

திருதியென தொழும்பர்முன் தெரிசனைத்தந் தருட்செயுந்
தினகரனே ஞான மனோகரனே !
வெருவலனு மெமனெனு மரணம்வர கடமது
வெந்துதண லாகுமுன் வினைதீர்த்தான்
பெரும்பயனே யாவுக்கும் பெம்மானே சகலத்தும்
பிரிவினையின்றி கலக்கும் பெரியோனே !
கருதரிய கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே ! நினடியரைக் கார்த்தருளே. (௨)

மதியுடையாய் சருவத்து மகிழ்வுடையா யருணிதி
வழங்குபவா ! ஞான மலர்மணமே!
விதியுடையான் றனைசிறை வைத்தசிவ முருகனின்
விஞ்சைமொழிக் ககமகிழ் வித்தகனே !
பதியுடையா யனுதினப் பற்றுடையா ருளமதிற்
பதிந்தவனே ! யுண்மைப் பகருபவா !
கதியுடையாய் கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே ! நினடியரைக் கார்த்தருளே. (௪)

ஆரணமுஞ் சுருதிக ளாஸ்ப்பதமாம் புராணமு
மதனதனே ருளங்கொண் டமர்ந்தவனே !
பாரதிலே விளைவினைப் பவரோகக் கொடுநோய்
பற்றற்று ரவர்தானே சுற்றத்தார்
வேரற்று லெங்ஙனந் துளிர்ப்பதுண்டோ வதுநிகர்
வித்தற்று லியாவும் பெலிந்துடுங்காண் ?

காரணனே! கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே! நினடியரைக் கார்த்தருளே. (ரு)

தோதகமு மதில்வினைப் பாதகமும் பலவித
தொந்தமென வலிதுகொள் பந்தமெலா
மாதவன்முன் பனியென வடங்கிடினே சஞ்சித
மவைவிலகுந் தவநெறி யவைசிலவும்
சாதனையின் படிமனங் கலந்திடினே மரணமாஞ்
சங்கற்ப முணர்ந்திடி லிங்கற்பம்
காதலுடன் கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே! நினடியரைக் கார்த்தருளே. (சு)

உருவனைத்து மொருபடி யெனநினைக்கு முயர்குண
முடையவரே! தெய்வ நிலையுடையார்
தருவனைத்து நினதரு ளெனநிலைக்கும் வரமது
தழைத்திடினே யேழையான் பிழைத்தனன்காண்?
திருவனைத்து மினிவருஞ் சனனப்படு மலைதனை
சிதைத்திடுமே கூற்றனை வதைத்திடுமே?
கருவகற்றுங் கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே! நினடியரைக் கார்த்தருளே. (எ)

நிலைதவரா தவர்களே நிட்டையெனு நெறியினி
னின்றனரா லுழவை வென்றனரே
தலைப்படவும் பலசோலிர் தனில்விழுந்தா ரெழுந்து
தண்ணளிசே ருயர்வழித் தாங்குவரோ?
வலையிற்படு மியிரென மயலளிற் சிதைந்துள்ளம்
வாடினவை மறைவோரி னருண்விழிக்கே?
கலையுலவுங் கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே! நினடியரைக் கார்த்தருளே. (அ)

சிற்பரமே! சிவஞானச் செழுமதியே! வுயிர்களுட்
சிறந்தவனே வினைச்செயன் மறந்தலர்கட்
கற்புதமே! நிறைதெய்வ வாதிக்கமே சருவமு
மாண்டவனே! ஆண்டனு பவிப்பவனே!
சொற்சுவையாய் கலந்தொளிர் சூட்சுமமே! தொழும்பர்க்கு
துணைநினையன் றியெவரைச் சொலவசமோ?
கற்பகமே! கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே! நினடியரைக் கார்த்தருளே. (கூ)

வெஞ்சமரிற் றலைவனாய் யிருந்திடற்போ லுலகினில்
விளைவினைக்கு முதல்வனாய் மிகமகிழ்ந்தேன்
செஞ்சடா டவியனே! செக்கர்வே ணியனேமெய்த்
திகழ்பவரே கண்டுப் புகழ்பவரே!
பஞ்சவரா லணுகிடும் பாழ்வினைக ளொழிந்திடப்
பாடுபட்டார் முத்தியி லீடுபட்டார்
கஞ்சன்பணி கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே! நினடியரைக் காத்தருளே. (௰)

அருமருந்தே! தேவர்கட் கதிபதியே கலந்தரு
மாதிபனே! ஞானச் சோதியனே!
வருவிருந்தே தொழுவார்க்கு வாழ்வளித்து மருட்செய்யும்
வள்ளலே! யேழை யுளமதைத்
திருக்கோயி லெனவமர்ந் தாடற்புரி சங்கர
சின்மயனே! தன்மசொரூபியனே!
கருணைமன் னுங் கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே! நினடியரைக் காத்தருளே. (௰௧)

அண்டர்முத லளவுபடா தேவரிரு டியர்சருவ
ஆன்மாக்க ளெனும்பசுக்க ளறியவொணா
திண்டிறற்கு முபயசரஞ் சிறந்தவனே விலையில்லாச்
செல்வமே! வுயாதரச் செழுமதிய
பண்டைவினைப் பொடிசெய்து வருணவழங்குஞ் சுகாதீதப்
பண்ணவனே! யாவுக்கு முன்னவனாய்க்
கண்டுதொழுங் கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே! நினடியரைக் காத்தருளே. (௰௨)

அங்கையினில் மழுவதை யேந்தியவா! தேடிடு
மன்பருக்கு ஞானந்தஞ்சீ ரளிப்பவனே!
மங்கையுமை மயிலேன் வடிவுகொண்டே வணங்கிட
வரமருளி யிடபாக மளித்தவனே!
சங்கரனே! சம்போ! சாஸ்விதனே கருணைத்
தருபவனே! தொழும்பர்முன் வருபவனே!
சங்கையனே! கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே! நினடியரைக் காத்தருளே. (௰௩)

சத்துசித்தா னந்தமாய்த் தழைப்பவனே! யாவையுந்
தாங்குபவா! வுயிர்க்குளே வோங்குபவா!

பித்துடைய மூவாசைப் பின்சென்றே யலைந்தயிப்
    பேயனையாண் டெழிலருட் பெருமானே!
பத்திசெய்த மிககலப் பத்தரெவா நினதருட்
    பரவினர்கா ணெளியவன் பவமென்சொல்?
கர்த்திபனே! கயிலையா மயிலைவளர் கபாலீசக்
    கடவுளே! நினடியரைக் கார்த்தருளே. (௰௪)

அளவுபடா திருவுரு வமைந்தவனே சிவஞ
    யமைந்துமறைந் தலவிடு மற்புதத்தி
னுளவதனை யொருசிறி துரைத்திடினே நினதருட்
    குழைத்திடுவே னன்பிற் றழைத்திடுவேன்
உளந்தெரிந்து வேண்டிய துதவிசெயும் பாத்துவ
    மொருவரிலை யிஃதுண்மைத் தெரிந்ததுவே
வளங்கமிலாக் கயிலையா மயிலைவளர் கபாலீசக்
    கடவுளே! நினடியரைக் கார்த்தருளே. (௰௫)

மாசில்லா மனத்தோருண் வாழ்முதலே ஞான
    மலைவடிவே! அரியமெய்க் கலைமுடிவே!
தேசயரும் பாஞ்சுட ரெனவிளங்கி நலந்தருஞ்
    சிற்பரனே! கருணைசூ ழற்புதனே!
வாசமென யன்பருள் மன்னுபவா சந்ததம்
    வந்திக்குஞ் சிந்தையு ணடிப்பவனே!
காசினியிற் கயிலையா மயிலைவளர் கபாலீசக்
    கடவுளே! நினடியரைக் கார்த்தருளே. (௰௬)

இருவினையற் றவர்களே யெழிலுடையார் பவமெனு
    மின்னலதா முன்வினைக் கொன்னலதை
ஒருவாது தவநெறி யுணர்ந்தவரே யெவைக்கு
    முயர்ந்தவரே அன்பு ணயந்தவரே
மருவுகின்ற பலயிடர் வாதனையாற் சுகநிலை
    வாய்த்திடுமோ? ஞானக்கனி காய்த்திடுமோ?
கருதரிய கயிலையா மயிலைவளர் கபாலீசக்
    கடவுளே! நினடியரைக் கார்த்தருளே. (௰௭)

பன்னகம்வாய்ப் படுவுயிர் பிழைத்திலைபோல் மாய்கையைப்
    பற்றிநொந்தே னிவைக்கண்ணூர் பார்த்தனையே
தன்மசிந்தை யுடையவர் பலநன்மைகளை யடைந்து
    சனனம்வராப் படியொழித் தின்பமுற்றூர்

ஒன்னலர்போ லுயிரதற்கு ளொளித்துயிடர் புரியைவ
　　ரொடுங்கிடோ வதைத்தயவா யுரைத்திடுமே
கன்மமிலாக் கயிலையா மயிலைவளர் கபாலீசக்
　　கடவுளே! நினடியவரைக் காத்தருளே. (௰௮)

தருணமறிந் துதவிட வருபவனே ஞானச்
　　சந்திரனே! யொப்பிலாச் சுந்தரனே!
வருந்தன்ப மனைத்தையும் பொடியாக்கித் தொண்டரை
　　வணங்கிடவு ஞான்று மிணங்கிடவும்
பெருமானே! தயைசெயப் பேதையன்யான் வருந்தினேன்
　　பிஞ்ஞகனே! யிச்சமயந் தஞ்சமுநீ
கருணைநிறை கயிலையா மயிலைவளர் கபாலீசக்
　　கடவுளே! நினடியவரைக் காத்தருளே. (௰௯)

எந்தையுநீ யெளியனுன் மைந்தனென வாதரித்
　　தெழிலளித்தாள் முன்செய்தப் பழியொழியும்
அந்தகன்போ லிறுதியி லலைவதிலை யிதுநிச
　　மறிந்தனையே யெனப்பனே! ஆருயிரே!
பந்தமிலா தவங்களே பணியுடையார் தவநெறிப்
　　பரிவுடையா ரருண்மலித் தெரிவுடையார்
சுந்தமெனக் கயிலையா மயிலைவளர் கபாலீசக்
　　கடவுளே! நினடியவரைக் காத்தருளே. (௨௰)

பொற்புயரும் பரம்பொருட் புனிததயா நிதியேநின்
　　பூங்கழலை ஞான்று நீங்கிலா
யுற்புல மென்பதுயிலா வுத்தமர்க ளிருதயத்
　　தொண்டரே! யன்பர்க் கிலையிடரே
விற்பனரா யுன்பத்தி விழைந்தவரே யருளன்பு
　　மேவினரே சகசசிட்டைத் தாவினரே?
கற்பனைசூழ் கயிலையா மயிலைவளர் கபாலீசக்
　　கடவுளே! நினடியவரைக் காத்தருளே. (௨௧)

தொடர்ந்துசதா வினையெனுந் துயர்ப்படலந் தனில்மூடி
　　துகளுற்றேன் சொல்லொணு யிகலுற்றேன்
படர்ந்தகொடி செடியிலை காய்கனிபோ லூழதுப்
　　பற்றிடுதே நன்னெறி வுற்றிடுதே?
விடந்தருகும் வழியினில் மிகுமகிழ்ந்தே களித்தன்ன்
　　விடுபடுமோ? யிலையென் றுந் தான்கெடுமோ?

கடம்பபதி கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே ! நினடியரைக் காத்தருளே. (உஉ)

மாதவஞ்செய் தவர்களே மாண்புடையா ரெழினிறை
மன்னுவர்கா னென்று மின்னுவரே
பாதகஞ்செய் தவர்களிற் றலைவனெனத் திரிந்தலைப்
பாவிதனை யாதரிப்பவ ரிலையிலையே
வேதமுநா தமும்பஞ்ச பூதமுமாய் நிறைந்திடும்
வித்தகனே கருணைநா நித்தியனே !
காதல்மிகுங் கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே ! நினடியரைக் காத்தருளே. (உ௩)

உற்பலமுங் கற்பனை குணங்குறியுங் கோலமு
மொன்றமிலாப் பரஞ்சுட ரானவனே !
தற்பரனே ! சிவஞானத் தாயகனே யருண்மலி
சங்கரனே ! சம்போ ! சடாதரனே !
சிற்பரனே ! திகட்டாத செங்கரும்பே ! காரணச்
சிந்தையர்கள் சதா வந்தனைசெய்
கற்பகமே ! கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே ! நினடியரைக் காத்தருளே. (உரு)

எங்குநிறைந் தினியக லுளமதனி னடம்புரி
யிறையவனே ! தொழும்பர்க் குறையகற்றி
தங்குபுகழ் வரந்தந் தாதரிப்பா யிதுவேளை
சதுரிதனே ! அங்கையில் மழுவுடையாய்
மங்களமாய் சிவப்பிரகா சனின் செந்தமிழ்மலர்
மாலையதைச் சூடினி னுசீருடன்
கங்கையனே ! கயிலையா மயிலைவளர் கபாலீசக்
கடவுளே ! நினடியரைக் காத்தருளே. (உரு)

—0—

## எல்லாம் சிவமயமேயென வெண்ணித்துதித்தல், சிவஞான லட்சண வுண்மை விளக்கம்.

காப்பிய கலிநிலைத்துறை.

தாயின் கருவெனு முதார வழியினிற் சனித்த தெல்லாம்
மாயிரு ஞாலத்தினும் பசுக்களெனும் வாக்கியமே
காயமே கொண்டதிற் கடவுளெனும் பெயர்க் கலந்திடினும்
தூய சிவமய மியாவுமென்றே மறைத் துலக்கிடுமே.

-600 008.
175565

**சோடசம்.** பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.
பண் - நட்டபாஷை.

——)(——

அணிகொண் டிலங்கிடும் * அகரவுகரமு மகர
மாகுமிம மூன்றக்கர
மதினையொரு முதலாக்கி யவையுள்மூர்த்தி கர்மூன்று
மயனரி ருத்ரனெனவே
திணிகொண்ட தேவராய் செனனமதுக் கொண்டாலுஞ்
சிருட்டி திதி சங்காரமாஞ்
செயற்கொண் டிருக்கினு மிவ்விரண்டுஞ் சங்காரச்
செய்கையி லொடுக்கமாகும்
பணிகொண்ட வலைசடந் தலைக்குமேல் திரோபவம்
பயன்படூஉம் அநுக்ரஹம்
பஞ்சமூர்த் தங்களென பஞ்சபூதத் தொழிலும்
பண்ணுதல் சதாசிவமதாம்
மணிகொண்ட சருவமுஞ் சீரம்வயிறு பாதமன்றி
மக்களிலையெனற் சத்தியமே
மன்னுதவ நன்மையருளுன்னத கபாலீச
வள்ளலே மஹேசசிவமே. (௧)

* விஷயார்ப்பணம்.

சிரம் — சிகரம் தலை - இதில் முதலெழுத்து - சீ - ருத்திரன்
வயிறு — வகரம் உந்தி - இதில் முதலெழுத்து - வ - விஷ்ணு
பாதம் — மகரம் கால் – இதில் கடையெழுத்து - ம் - பிர்மா

எப்பிறவியும் இம்மூன்று மின்றேல் அவை பிறவியிலுனப்பட்ட தெனப்படும். இவைகட்கு ஆதாரவாயிருப்பது இம்மூன்றே அவசியமென்பது முக்காலத்து முண்மைப்பொருளேயாம். ஆதலால் இச்சிவமானது அந்தரங்கத்தி லிருப்பதாலும், தபோ நிட்டையிலுட்படுதலானும், அவை முறையே, சீவன் உயிர் பிராணன் ஆவி எனபலப்பொருளாய் வழங்கி வருதலானும், அவை தொழின்முறையில் ஒன்றிலொன்று பேதப்படலானும், அப்பேதங்கடந்து அவையாவும் ஒன்றாகப் பார்க்கக்கூடிய ஞானேந்திரிய வசத்தால் கன்மேந்திரிய மொடுங்கினக்கால் இதனுண்மை வெளிப்படலும், அதனது சத்து சித்து நிலையாய்த்து ஆனந்த ஞான விலாசத்தில் பரமானந்தமுற் றிருத்தலே சிவஞான மெனப்படுமென

சைவாகமங்களும் சுருதி, ஸ்மிருதி, மஹாவாக்கிய குருசுவாநுபவத்தின் வழி சித்தித்தபிடத்தல் விளக்குமெனல் மலைமேலிட்ட தீபம்போல் உட்கிடையாஸ்பத சுகார்ஜிதமெனப்படும்.

—— )§( ——

சொல்லரிய பலசுருதி பலவுருவம் பலசெய்கை
சொற்கமழு மலரிணிகராய்த்
தூயகுண ஞேயமலி ஞாயமதி வாயமுரைத்
தொன்மையெனும் பழமையாகக்
கல்விபல கற்பர்சில கற்றவையி னிற்பவைக்
கடிதகடி தென்பருண்மைக்
காரணமுங் காரியமுங் கனகமும் பணியெனப்போற்
கண்ணுளறி வெனுமெய்ஞ்ஞான
எல்லையில் லாதநிலை யாய்த்துநெறி யின்றவர்க
ளேகாந்த யோகஞான
மிறதிவழி கைவரவே யதிலொழுகுந் தேனுண்டு
பிறப்பிறப்பு பசிருசியிலா
வல்லகுண முள்ளவர்க ளுள்ளபொரு ளுண்மையதில்
வாழ்வர்க ளென்கதியெனோ?
மன்னுதவ மன்மையரு ளுன்னத கபாலீச
வள்ளலே! மஹேசசிவமே. (உ)

ஓதாம லோதிமறைப் பேசாது பேசியவ
ரோகேகாம லொகேகிநலமா
ரொப்புயர் விலாதசுக போக யோகமுமதனு
ளோங்குஞ்சிவ ஞானமுத்தி
பேதா பேதமுமற்ற பேரின்ப மனோதீதப்
பின்முனற் றொருபடித்தாய்
பிரணவ பிராணனு னொப்பேறி யதிற்சிறிதும்
பிசகாத சுழுச்சிமுடிவாம்
ஆதார மாதேய ஷட்குண காசுபிஷ
அந்தரார்த் தத்தின்வெளியி
லாட்பட்டு பினிசனனம் வாராம னிட்டையி
னதிமதிகொ ளாப்தருநவே
மாதாபிதா சற்குரு மன்னன்மனை மக்களென
வந்தருளுந் தெய்வமயமே

மன்னுதவ நன்மையரு ளுன்னத கபாலீச
வள்ளலே ! மஹேசசிவமே. (௩)

ஆண்பெண் ணிரண்டென வகுத்தனைக் குற்றமிலை
யதிலோங்கும் பலபலகுண
மவைநன்மை தீமைசுகி துகி முத்தி நரகென
வாசையும் வெறுப்புபொய்மெய்
காண்பதத னுற்சகல விகாரமும் விசாரங்
கைகண்ட பொருளென்னவே
கவலையதிற் றிவலையென வவதிபட் டிவனெழிதற்
கணக்கெவ ருரைக்கவல்லார் ?
பூண்பதும் புசிப்பதும் புசித்தபி னுறங்கியே
போனதென தாயுளெல்லாம்
புத்தியிலை நின்றனது பத்திசெய் திலைமுத்தி
போகமதை யடைதலெளிதோ ?
மாண்புயருஞ் சருவபொரு ளுனையன்றி சொல்லவெளி
வாய்வருமோ ? மஹனியருரை
மன்னுதவ நன்மையரு ளுன்னத கபாலீச
வள்ளலே! மஹேச்சிவமே. (௪)

பஞ்சபூ தச்செய லொடுக்கமனம் வசமாரும்
பக்குவந் தன்னிற்றேர்ந்து
பசிதாக மிரவுபக லுண்மைபொய் மதிவிதி
பற்றுகட் சிறிதுமின்றி
விஞ்சைமிகு செஞ்சரணந் தஞ்சமென மிஞ்சுகுண
மிக்கசதா வேண்டிதொழுது
விபரீத குணமதால் வீண்பொழுதைப் போக்காது
மேலவர்க ளுறவுகொண்டு
அஞ்சாத வஞ்சமனச் சேட்டைநிறைக் கோட்டையை
யதோகதிய தாயிடித்து
* அக்கர சொரூபமே முப்பொருளென் றுளவாய்ந்து
அனுட்டிக்க வுதவும்பரமே !
மஞ்சுருவா யுமையன்று மயிலான கயிலாய
வளர்பதியி லுயர்தெய்வமே
மன்னுதவ நன்மையரு ளுன்னத கபாலீச
வள்ளலே! மஹேச்சிவமே. (௫)

* அக்கரம் - அ - உ - ம் - ஓம் இவை பிர்மா, விஷ்ணு, ருத்திரன் எனப்படும்.

அக்கரம் ஐந்து - சிவயநம, - நமசிவய எனப்படும். இவை தியானமாத்திரை. இவை உலகவேட்கை, முத்திசாகையென இரு வகைப்படும்.

அக்கரம் ஐம்பத்தோன்று - இவை சிதம்பரசக்கர மெனப்படும் ஏகாட்சரம், பஞ்சாட்சரம், சடாட்சரம், அஷ்டாட்சரம், ஆராதாரம் முதலிய பிறவும் குருமுகத்தாலறிக.

அக்கரம் ஆயிரத்தெட்டு - உயர்த்த கனகம் ஆயிரத்தெட்டு மாற்றுடையது. இவை முறையே; நூற்றெட்டு திருப்பதி, ஆயிரத்தெட்டு சிவலிங்கமென பூசித்து சகல நன்மையுமடைவர்.

சத்தி - சிவம் - நாராயணி - நாராயணனெனப் பெறப்படும் இவை கடந்த ஞானியர்க் கருத்தின் முடிவு.

பலபேத மெதுவரையி னிலைப்படுமோ வதுவரையிற்
பக்குவம் வசப்படாது
பாரெலாம் வயப்படினும் தன்னைப்பார்த் தடங்காதப்
படிப்பதுவு முத்திதருமோ ?
மலபேத மதனாலே விளைகின்ற தவையெலாம்
வயிறுார வுண்டுறங்கி
வசனிப்ப ததனிலபி தானபுரு ஷார்த்தமாய்
வாதிட்டு கைக்கொட்டியே
சலபேத மின்றியதிற் சளிப்புதெல்லாங் கொள்ளைத்
தானாகக் காணுதெவர்
சச்சிதா னந்தசுழ லுச்சிமேற் பட்டிடிற்
சஞ்சிதமெலாம் பொடிபடும்
வலபேத மின்றிசதா வந்துவழி பாடென்
வணங்கினவ ரிவண்பிழைத்தார்
மன்னுதவ நன்மையரு ளுன்னத கபாலீச
வள்ளலே! மஹேச்சிவமே. (சு)

சுத்தமு மசுத்தமென சொல்லுமவை யிரண்டிலே
சுத்தமுளோர் சிறப்புஞ்சீலஞ்
சொல்லாம லடைகுவ ரெனிலிவரைத் தூய்மையர்ச்
சூழ்ந்தா வுணைப்பர்போல
சித்தமது சுத்தமுள பத்தரிடங் கர்த்தனுஞ்
சின்மய சிவபிரானுக்

தேடியுள நேடிவினை யோடிடவு நாடியருட்
செய்தவை யெண்ணிக்கையுளதோ ?
பித்தமது தாய்க்குளது பிள்ளைமனக் கல்லெனப்
பேசினதுப் பொய்யதாமோ ?
பித்தனென வத்தனை பத்தன் சுந்தரன்சொன்னது
பிசகாது மூவுலகினும்
மத்தனென வாயாடிப் பேயாய்த் திரிந்துழலும்
வஞ்சமுள நெஞ்சறியுமோ ?
மன்னுதவ நன்மையரு ளுன்னத கபாலீச
வள்ளலே ! மஹேச்சிவமே. (௭)

அம்மென்ற வட்சர அகாரமதை யாய்ந்திடி
லாயிரத்தெட்டு வண்ட
மதற்குளே யொடுங்கிபல வாட்டங்கட் செய்வதென
அனுபவிக ளெடுத்துரைத்தார்
உம்மென்ற வட்சர உகாரமதை யுற்றுணரி
லுயிரெலாம் ஓங்கார வடிவா
யுற்பவமுங் கற்பனையு மற்புதமுந் தற்பரமா
யுடலெலாந் தனதாட்டம்
மம்மென்ற வட்சர மகாரமதை வசனிக்கில்
மாளாத மாய்கைமாய்கை
மவுனநிலை யாராய்ந்து வொடுங்கிடிற் சிகாரமதில்
மண்ணும்விண்ணு மொன்றதாம்
வம்மென்ற மர்க்கட மொடுங்காத வகாரவிது
வாய்ப்பதரி தென்பர்மேலோர்
மன்னுதவ நன்மையரு ளுன்னத கபாலீச
வள்ளலே ! மஹேசசிவமே. (௮)

விண்கோட்டை யதில்வீடு கட்டியர சாள்வதென
விபரீத சிந்தையதனுல்
மெய்யென்ப தையற்று மெய்யெனுமிவ் வாக்கையை
மெய்யெனவே நம்பிகெட்டு
எண்கோட்டை யதுமூடிவீற் புண்கோட்டை யானதலா
லிறவாது கிற்பதில்லையா
லென்செயவா மென்றெண்ணி யென்னென்னே வழிபா
டியற்றினும் பயனில்லையே ?

பண்கோட்டை யதில்வந்து பட்சமுடன் குடிகொண்டு
பாடற்கேட் டானந்தமாய்ப்
பலவடிவமுக் காட்டி பகரரிய லீலைகாட்டி
பரிசளித்த தயைக்கொஞ்சமோ ?
மண்கோட்டை யிடிந்துவிட மாற்றானெனும் மரணம்
வருநாளிற் றுணையெவர்சொலாய்?
மன்னுதவ நன்மையரு ளுன்னத கபாலீச
வள்ளலே ! மஹேசசிவமே. (௧)

பரமகிரு பாகர பாஸ்கர சிதாபாச
பாக்கியசுக வாக்கியயோகப்
பருதியென வந்தவுஞ் சிற்பரா ! தற்பரா
பண்ணிலிசை யானநாதா !
கரணமதெர்மெங்கிலைப் பற்றலாமெனில்வினைக்
கட்டிலகப் பட்டுநொந்து
கணமதிற் பிணமாகு மிணமசலைக் குணமாகக்
கருதினே னிவைநல்லதோ
மரமான ததற்குவிந்த கொடியிலைபூ காய் கனிகள்
வளம்பெற விளைந்துதிருமவ்
வண்ணமே மண்ணும்பொன் பெண்ணெனு மூவிதையுள்
வளர்ந்தொழிவேன் கதியென்கொலோ ?
வரமான தவரின் மண்ணூனும் பொன்னுகும்
வள்ளுவர் தேகஞ்சாட்சியமே !
மன்னுதவ நன்மையரு ளுன்னத கபாலீச
வள்ளலே ! மஹேசசிவமே. (௨)

அஞ்சாதே மகனேயென வழைத்து வாதரித்திடு
மன்னைபோலெ னப்பனேயிவ்
வசடனை பலபாவக் கசடனை நிசமிலா
வற்பனை சொற்பனை துர்ப்பல
நெஞ்சான ததுவலிமைக் கொண்டுழலு நீசனை
நீக்கிடிலையோ தவிப்பேன்
நித்தியானு பவசுகிர்த சத்தியானுபவத் தொழும்பு
நேசமோ போசனைசெய்வோர்
கஞ்சமலர் செஞ்சரணை அஞ்சலென நெஞ்சினின்
கருணைபெற நாளெந்தநாள் ?

கபடநாடக சூத்திர கண்ணன்சொன்ன வேதையாற்
கண்ணப்பனென பர்க்குணன்
வஞ்சமற வந்தபிறந் தின்புற்ற தவைபொய்யோ?
வாய்க்குமோ மௌனமென்பார்
மன்னுதவ நன்மையரு ளுன்னத கபாலீச்
வள்ளலே! மஹேசசிவமே. (௰௧)

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
பலிதமென மறைவாக்கியஞ் சொல்வதே யல்லாது
பாரில்வந்த சனனமெல்லாம்
கல்லாகி யசையாது நடவாதப் பேசாது
கண்பார்க் கிலாதவண்ணங்
காண்பதற் கிறவாது நின்றதெவ ரையகோ?
கண்கெட்ட மாடாகினேன்!
புல்லாகி லுனதுமுடிக் கணியா யிருந்திடும்
புண்ணியமது வாய்த்ததென்கொல்?
புத்தியுஞ் சித்தமனம் போனவழி யலைந்துழலும்
புலையன்பலக் கொலையிற்றலைவன்
மல்லாடி வழக்குரைத்து மாய்ந்தவ ரெத்தனைக்கோடி
வசனிப்ப ததிலென்பயன்
மன்னுதவ நன்மையரு ளுன்னத கபாலீச
வள்ளலே! மஹேசசிவமே. (௰௨)

எங்குநிறை லிங்கமே யெனைப்பெற்றத் தங்கமே
யெவ்வுருவைக் கண்டடைகுவே
னென்போல வொருபாவி யெங்கெங்கு தேடினு
மெங்குமிலை யெவருமிலைகாண்
தங்குபுக ழாளர்கட் சாதன சதுஷ்டயந்
தன்னிலே தேர்ந்துழைத்து
சர்வபரி பூரணா னந்தோ தயந்தன்னை
சார்ந்தண்மை ஞானமுற்றார்
அங்கம் வளர்த்திட யிரவுபக லொழியாமடி
லடிமைபடு கண்கலக்க
மையகோ! யாரறிவ ரறிந்தாலு மிதங்குமன :
மாவதது வெகுதுர்லபம்?

மங்காத வாழ்வருளு மாசிலாமணி நினது
யனுதினந் தாதரிப்பாய்
மன்னுதவ நன்மையரு ளுன்னத கபாலீச
வள்ளலே ! மஹேசசிவமே. (௰௩)

வெஞ்சின மிலாதகுண மேலோரே புண்ணியர்கள்
வித்துவினையா தழிக்கும்
விதங்கற்று பற்றற்று மெய்ஞ்ஞான நிலைக்கற்று
வினைவருகும் வழியடைத்து
பஞ்சான ததுவெள்ளை யல்லாது பேதமிலை
பலவர்ணச் சித்திரத்தாற்
பார்வைக் கெடுவதுமன்றி நூல்வண்மை யிழப்பதும்
பாரிலது வெளிச்சமன்றோ
எஞ்சியயிவ் வழிசெல்லாப் படிநன்மைக் கடைப்பிடித்து
யேகாந்த மானவர்க
ளெல்லாரு நல்லவர்க ளென்பே னல்லாதந்நெறிக்
கிச்சைவைத் துழைத்திலேன்காண்
வஞ்சியர்போல் வேடம்பூண் டெஞ்சிடாப் படிசெல்வ
வாஞ்சையுற் றலைந்தபொல்லேன்
மன்னுதவ நன்மையரு ளுன்னத கபாலீச
வள்ளலே ! மஹேசசிவமே. (௰௪)

கேளாதக் கேள்வியாற் கெடுசிந்தைக் கொண்டுழலுங்
கேடரைத் தடுத்தாளுவார்
செஞ்சினுஞ்சீர்ச் செப்புவோ ரொருவரிலை யையனே !
கீர்த்திபெறவே யுழைத்து
நாளாக நாளதைக் கழித்தே னலாதனடி
வாஞ்சித்து சலங்கோட்டியே
மலரிட்டு மந்திரஞ் சொல்லிமணி கிலுக்கிநல்
வாய்மைதவம் விரதமோம்பி
ஆளாகச் செய்திடி லளவிலாப் புண்ணியமுண்
டண்ணலேநான் சொல்லவெளிதோ ?
ஆசாரம் பூசைசெபந் தியான மந்திரயோக
மனுபவித்தோ ராசிர்பெற்றார்
மாளாத சனனவுத தியிலிறங்கி தவித்தேனுன்
மனமிரங்காத தென்தொலோ ?

மன்னுதவ நன்மைபரு ளுன்னத கபாலீச
வள்ளலே! மஹேசசிவமே. (௰௫)

எந்தையே யெனக்கார்க்குந் தந்தையே யென்னுயிரு
ளிருந்திடடஞ் செயுமண்ணலே
யென்றுமற வாதுதொழு மெய்யன்ப ருள்ளமே
யிடங்கொண்ட விறையேஞானச்
சந்த்ரமே சுகானந்த சுகிர்தமே சொல்லொணாத்
தூயனே! மாயரூபச்
சொச்சொரூப மானவா! துகளிலாச் சிந்தையு
ளெங்குஞ் சந்திரமௌலியே!
பந்தமெனுங் கந்தைமிடி நிர்தைமிடி வந்துழலும்
பரிதாபங் கேட்கவிலையோ?
பகாரிய வண்டபிண் டத்தெலா நிறைந்தநின்
பார்வைக்கு மறைவாகுமோ?
வந்தனைச் செய்தென்றும் சிவப்ரகாசன் றமிழ்
வழங்கவர மீந்தாளரனே!
மன்னுதவ நன்மைபரு ளுன்னத கபாலீச
வள்ளலே! மஹேசசிவமே. (௰௬)

—— § ——

## சிவானந்த கொண்டாட்டம்

## சைவக்கொடி - பூரி - சங்கு - எக்காளம்.

——()——

வண்ணச்சந்தக்கொழிப்பு

ஆதிமத் யாந்தமொன் றில்லாச் சிவமோங்குஞ்
சோதியாய் நின்றது சொல்லர்க் கரியது
நீதிநிராமய நிட்களமானது
நித்தியமான சதாசிவமானதென்
ஸ்ருதி புணர்ந்துளம் பேதியாமனின்று
சாதனைப்பாடி சைவக்கொடி பிடித்து
ஊதூதுபூரி - வூதூதுசங்கு - ஊதூது எக்காளம் - சைவர்களே
ஊதூது எக்காளம் - சைவர்களே ஊதூது எக்காளம்
ஓம்சிவயநம வெனத்திருநீறிட்டு - ஊதூது எக்காளம் (சைவ) (௧)

சித்தஞ் சிவமாக சிந்தைத் தெளிந்தார்க்கு
பத்தியுஞ் சித்தியும் பகருநல் முத்தியும்
வித்தகமாய்த்தரு மத்தன் சிவானந்த
கர்த்தன் புகழது எத்திசையு நிலவ
உத்தம மெய்நெறி யாளர்க் குதவிடுஞ்
சத்தஞுசிர்ப்பெற சைவக்கொடி பிடித்து
ஊதூதுபூரி - வூதூதுசங்கு - ஊதூது எக்காளம் - சைவர்களே
ஊதூது எக்காளம் – சைவர்களே ஊதூது எக்காளம்
ஓம் சிவயநம வென்த்திரு நீறிட்டு-ஊதூது எக்காளம் (சைவ) (௨)

எண்ணிலாத் தெய்வீக மெய்துகதிதந்து
பண்ணிசைக் கேட்டுப் பயனதுதவிய
அண்ணலே மெய்ப்பர மல்லாது வேறில்லை
ஆனந்த மானந்த மானந்தம் பாடி
உண்மையி னின்றவ ருள்ள நிறைந்தது
உலகமே பொய்யென்று சைவக்கொடிபிடித்து
ஊதூதுபூரி - வூதூதுசங்கு - ஊதூது எக்காளம்–சைவர்களே
ஊதூது எக்காளம - சைவர்களே ஊதூது எக்காளம்.
ஓம் சிவயநம வெனத்திரு நீறிட்டு ஊதூது எக்காளம். (சைவ) (௩)

தன்னந் தனியானேன் றனக்குவோர் நிகரில்லான்
சன்ம கன்மமனைத் தான்றீர்த் தருளீவோன்
பன்மறைக் கெட்டாதப் பரமானந்த சிவம்
பாராமற் பார்ப்பவர் பார்த்து மகிழ்பவன்
உன்னத பதவிதந் துண்மைக் கொடுப்பவன்
உள்ளங் கசிந்தன்பாய் சைவக்கொடி பிடித்து
ஊதூதுபூரி - வூதூதுசங்கு – ஊதூது எக்காளம் சைவர்களே
ஊதூது எக்காளம் - சைவர்களே - ஊதூது எக்காளம்
ஓம் சிவயநம வெனத்திரு நீறிட்டு-ஊதூது எக்காளம். (சைவ) (௪)

பாங்குயர்த் திருவடிப் பாடிப் பணிந்தன்பு
நீங்காதப் புண்ணியர் நிலையினிற் றங்குவோன்
போங்காலம் வருமுன்னே புனிதக் கழலைத்தேடி
பொய்யு மெய்யுமற்று புகழான வருட்பெற்று
ஓங்காரப் பிரணவ மோங்கு நிலைப்படி
உலகெலாம் போற்ற சைவக்கொடி பிடித்து

ஊதுதுபூரி - வூதுதுசங்த-ஊதுது எக்காளம் - சைவர்களே
ஊதுது எக்காளம சைவர்களே - ஊதுது எக்காளம்
ஓம் சிவயநம வெனத்திரு நீறிட்டு-ஊதுது எக்காளம. (சைவ) (௫)

விண்ணுமண் ணென்றாகி வேதப்பொருளாகி
கண்ணுங் கருத்தாகி கலைகட் பலவாகி
எண்ணுமெழுத்தாகி யெல்லாப் பொருளாகி
ஏகாந்த வடிவாகி எங்கு நிறைந்ததாகி
ஓங்கிக வுருவாகி யுவமைக் கடங்காதாகி
ஓய்ந்த சுழுத்திபடி சைவக்கொடி பிடித்து
ஊதுதுபூரி - வூதுதுசங்த - ஆதுது எக்காளம் சைவர்களே
ஊதுது எக்காளம சைவர்களே - ஆதுது எக்காளம்
ஓம் சிவயநம வெனத்திரு நீறிட்டு - ஆதுது எக்காளம் (சைவு) (௬)

கடலிலன்றெழுந்த விடமுண்டாதரித்த
திடமான வலியுள்ள தெய்வம் வேறில்லையென
தடவரை யெரித்தவன் சந்திர சடாதரன்
சமஸ்த சீவர்க்குளே தான்விளையாடுவென்
உடலது அழியாத வுளவதைச் சொல்பவன்
உத்தம பத்தியாற் சைவக்கொடி பிடித்து
ஊதுது பூரி - வூதுதுசங்த - வூதுது எக்காளம் சைவர்களே
ஊதுது எக்காளம் சைவர்களே - வூதுது எக்காளம்
ஓம் சிவயநம வெனத்திரு நீறிட்டு - வூதுது எக்காளம் (சைவு) (௭)

என்றென்றுமழியாத யீசன் மஹேச்சுரன்
நன்றென்ப தாய்ந்தோருணடி நடிப்பவன்
கொன்றை யிந்திரியத்தாற் குழந்தையாக்காதவர்
கோடித்துகும்பிடக் குணந்தந்து மகிழ்பவன்
ஒன்றாகிப் பலவாகி யுள்ளதில்லா தாகி
உபாசனைச் செய்து சைவுக்கொடி பிடித்து
ஊதுதுபூரி - வூதுதுசங்த - ஊதுது எக்காளம்-சைவர்களே
ஊதுது எக்காளம் - சைவர்களே - வூதுது எக்காளம்
ஓம் சிவயநம வெனத்திரு நீறிட்டு-வூதுது எக்காளம், (சைவு) (௮)

சலனசஞ் சலமிலான் தனக்காரு நிகரிலான்
மலமூன்ற மறந்தோருள் வாழ்கும் பரம்பொருள்
விலகாது பக்திசெய் மெய்யருக்கு மெய்யன்
விஞ்சை யறியாத வேடருக்கு பொய்யன்

உலகெலாந் தனக்குளே யொடுக்கி யாளுபவன்
ஓடித்திரியாமற் சைவக்கொடி பிடித்து
ஊதுதுபூரி - வூதுதுசங்கு - ஊதுது எக்காளம்-சைவர்களே
ஊதுது எக்காளம் - சைவர்களே - வூதுது எக்காளம்
ஓம் சிவயநம வெனத்திரு நீறிட்டு-வூதுது எக்காளம். (சைவ) (௬)

கற்பனைக் கடந்தவன் கற்றவர்க் கண்ணுள்ளே
விற்பனமாக விளங்கிடு மெய்ப்பொருள்
பொற்புய ரற்புதன் புத்தியு ணிலைப்பவன்
போக்கு வரவிலாப் பூசுரன் ஈச்சுரன்
உற்பவ மொன்றிலா னுணர்வதற் கரியவன்
உள்ளன்பு கொண்டு சைவக்கோடி பிடித்து
ஊதுது பூரி - வூதுதுசங்கு - வூதுது எக்காளம்-சைவர்களே
ஊதுது எக்காளம் சைவர்களே - வூதுது எக்காளம்
ஓம் சிவயநம வெனத்திரு நீறிட்டு - வூதுது எக்காளம் (சைவ) (௰)

பலபேத வடிவாகிப் பாரெலா நிறைந்தவன்
குலமுடன் கோத்திரங் குணமுங் குறியுமில்லான்
புலனைந்து மொடுங்கினர் போற்றற்குகந்தவன்
பொய்யுமெய் வேண்டாத பூபர்க்கருகினன்
உலவியு முலவாது வுட்கார்ந்து நிட்டைசெ
யுத்தமர் சித்தம்போற் சைவக்கோடி பிடித்து
ஊதுதுபூரி - வூதுதுசங்கு - வூதுது எக்காளம்-சைவர்களே
ஊதுது எக்காளம் சைவர்களே - வூதுது எக்காளம்
ஓம் சிவயநம வெனத்திரு நீறிட்டு - வூதுது எக்காளம் (சைவ) (௰௧)

தன்னந் தனியனுகி சாட்சி காட்சியாகி
முன்னும் பின்னுமாகி முதலாகிக் கடையாகி
நன்மைத் தீமையாகி நாளுங் கோளுமாகி
நாட்டங் கூட்டமாகி ஆட்டம் பாட்டுமாகி
ஒன்னல லறியாத வுயர்வுந் தாழ்வுமாகி
உலகெலாம் பணிசெய்யு சைவக்கோடி பிடித்து
ஊதுதுபூரி - வூதுதுசங்கு-ஊதுது எக்காளம் - சைவர்களே
ஊதுது எக்காளம சைவர்களே - ஊதுது எக்காளம்
ஓம் சிவயநம வெனத்திரு நீறிட்டு-ஊதுது எக்காளம். (சைவ) (௰௨)

தவமுந் தானஞ்செய்து சன்மார்க்க நெறிநின்று
அவமிலா மனத்தோரு ளமர்ந்தாடு மாண்டவன்

சிவப்ரகாச தேசிகன் செந்தமிழ்ப் பாடியே
சித்தமொருமித்து செகமெலாம் புகழோங்க
உவமை யுற்பவமிலா துயர்நலப் பணிநாடி
உத்தம பத்தியாய் சைவக்கோடி பிடித்து
ஊதூதுபூரி - ஆதூதுசங்கு - ஊதூது எக்காளம்-சைவர்களே
ஊதூது எக்காளம் - சைவர்களே-ஆதூது எக்காளம்
ஓம் சிவயநம வெனத்திரு நீறிட்டு ஊதூது எக்காளம். (சைவ) (ம௩)

——()——

## பக்திசெய்ய நேரமில்லையேயென பயந்தரற்றல்.

——()——

## மஹேஸ்வரமாலை.

—)§(—

காப்பிய வெண்செந்துறை.

அருளா ணிறைந்துய ரரசர் மனைமக்க ளாப்த மித்திரர்
பொருளான் மகிழ்ச்சிக்கொள் புண்ணியர் கண்ணியர்ப் புரவலர்க
ளொருவாப் படிபல அதிகாரஞ் செய்யா னொழிந்த தையோ ?
வெருளாம லுன்னடி வேண்டவ தெந்நாளுண்மை விளம்புவையே.

———

பண் - பியந்தை - நாலடிமேல் மூன்றடிவைப்பு.
சந்தைவிசைக்கோழிப்பு.

——)§(——

எங்குந் தங்கந்தங்கு மிறையோனே மறைபோற்று
புங்கஞ் சங்கந்திங்கட் புனிதனே புகழாளர்
அங்க லிங்கவங்க மதுவாகிப் பொதுவான
இங்கங்கென் றியம்பொணு திலகும் பரத்வனே !
எத்தனையதிகார மெத்தனைமதிசோர மெத்தனை வ்யாபாரம்-சிவசிவா (எ)
இத்தனையுஞ் சகித்து யேழையுடம்பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெந்நாட் செப்புவாய் மாமஹேசனே (க)

கற்பனைக் கடங்காதக் கடவுளே ! வுடற்குள்ளே
பொற்புய ருயிராகிப் புகழ்ந்துள்ளே திகழ்பவா
அற்புதா காஞான ! அண்ணலே ! எண்ணில்லா
இற்புதத் தொளித்தபே ரின்பமே ! துன்பத்தில்

எத்தனை யதிகார மெத்தனைமதிகோர மெத்தனை வ்யாபாரம்-சிவசிவா (எ
இத்தனையுஞ் சகித்து யேழையுடம் பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெந்நாட் செப்புவாய் மாமஹேசனே (உ)

தொல்லையோ பொல்லாது சுகதுக்க மெப்போது
மல்லல் வல்லசுது அழிக்குதே முப்போது
மெல்லை யில்லாதவாது யிதக்கமில்லாக் கோது
இல்லாதார் நில்லாதார்க் கென்னுண் டுண்மையோது

எத்தனை யதிகார மெத்தனை மதிகோர மெத்தனை வ்யாபாரம்-சிவசிவ (எ)
இத்தனையுஞ் சகித்து யேழையுடம்பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெந்நாட் செப்புவாய் மாமஹேசனே (௩)

## சமயக்குரவர் நால்வர் மகிமை.

அங்கத்வத பூம்பாவை யாக்கினர் சம்பந்தர்
இங்கித வணிகனை யெழுப்பினர் சம்பந்தர்
மங்கலந் தனைச்செய்து வரந்தந்தார் சம்பந்தர்
எங்கும் பணிவெண்ணீறு யீந்தனர் சம்பந்தர்

எத்தனை யதிகார மெத்தனை மதிகோர மெத்தனை வ்யாபாரம்-சிவசிவா (எ)
இத்தனையுஞ் சகித்து யேழையுடம்பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெந்நாட் செப்புவாய் மாமஹேசனே (௪)

வஞ்சச் சமணர்சூலை வலியுற்றனரே அப்பர்
நஞ்சுண் டனலைவென்று நலம்பெற்றனரே அப்பர்
குஞ்சரந் தொழக்கருங்கல் குணதெப்ப லாக்கினர் அப்பர்
எஞ்சிய அப்பூதிசேயை யெழுப்பியளித்தாரே அப்பர்

எத்தனை யதிகார மெத்தனை மதிகோர மெத்தனை வ்யாபாரம்-சிவசிவா (எ)
இத்தனையுஞ் சகித்து யேழையுடம்பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெந்நாட் செப்புவாய் மாமஹேசனே (௫)

மங்கைய ரிருவரை மணங்கொண்டார் சுந்தரர்
பிங்கலைக்கு மேலோரை பித்தாவென்றூர் சுந்தரர்
செங்கல்லைப் பொன்னாகச் செய்தனர் சுந்தரர்
இங்கரா வுண்டோனை யீந்தனர் சுந்தரர்

எத்தனை யதிகாரமெத்தனை மதிகோர மெத்தனை வ்யாபாரம்-சிவசிவா (எ)
இத்தனையுஞ் சகித்து யேழையுடம்பெடுத்து பெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெந்நாட் செப்புவாய் மாமஹேசனே (௬)

அருளா லாலயஞ்செய்தார்ச் சித்தனர் மணிவாசகர்
வெருளு நரிபரியாய் விழைந்ததே மணிவாசகர்

திருவாசகம் எழுத செப்பினர் மணிவாசகர்
இருளா மூகைப்பெண்பேச வியம்பினர் மணிவாசகர்
எத்தனையதிகார மெத்தனைமதிகோர மெத்தனை வ்யாபாரம்-சிவசிவா (எ)
இத்தனையுஞ் சகித்து யேழையுடம் பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெங்காட் செப்புவாய் மாமஹேசனே (எ)

## எல்லாஞ் சிவவுருவமே என்றேத்தி யிணங்கிய திருத்தொண்டர் மகிமைச் சுருக்கம்.

---

மூவாயிரமறையோர் முறையே யாகஞ்செய்தார்
ஆவலராய்த் திருநீல கண்டத் தார்வமுற்றார்
தாவித் தாலியைவிற்று சதிராய்த் தூபந்தந்தார்
ஏவற்செய் அரிவாட்ட ரிறவாக் காட்சிபெற்றார்
எத்தனையதிகார மெத்தனைமதிகோர மெத்தனை வ்யாபாரம்-சிவசிவா (எ)
இத்தனையுஞ் சகித்து யேழையுடம் பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெங்நாட். செப்புவாய் மாமஹேசனே (அ)

அகக்கண் முகக்கண்ணோடு அமைத்துவூன் றந்தனர்
மகவாகு மிந்திரியம் வயமாக வகித்தனர்
சுகமாங் கனிபடைத்தோர் தோன்றுங் காட்சிபெற்றார்
இகத்துட் கோயிலமைத்தோ ரியம்பொணு வரம்பெற்றார்
எத்தனையதிகார மெத்தனை மதிகோர மெத்தனைவ்யாபாரம்-சிவசிவா (எ)
இத்தனையுஞ் சகித்து யேழையுடம்பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெங்நாட் செப்புவாய் மாமஹேசனே (கூ)

சலத்தினால் விளக்கேற்றி சந்ததந் துதித்தனர்
கலனைக் குளமூழ்கி கண்ரெண்டும் பெற்றனர்
நிலவுங் கோவணவாடை நீதிதந்தரு ளூற்றனர்
இலகுங் கூந்தலீந்து யெழிலார் மணம்பெற்றனர்
எத்தனை யதிகார மெத்தனை மதிகோரமெத்தனை வ்யாபாரம்-சிவசிவா (எ)
இத்தனையுஞ் சகித்து யேழையுடம்பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெங்நாட் செப்புவாய் மாமஹேசனே (௰)

அடியாரைப் பழித்தநா வறுத்து நலமடைந்தார்
மடிமீறு சமணரை வாதிட்டே மிடைந்தார்
கடியேறு மலரிரைத்த கயமூமாய்ந் துயிர்பெற்றது
இடியேறி நந்திபுத்த னென்பவன் சிரமற்றது

எத்தனை யதிகார மெத்தனை மதிகோரமெத்தனை வ்யாபாரம்-சிவசிவா (எ)
இத்தனையுஞ் சகித்து யேழையுடம்பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெந்நாட் செப்புவாய் மாமஹேசனே (௪௧)

சாய்ந்த லிங்கம்பூணூற் சாத்தவே நிமிர்ந்தது
மாய்ந்தெண்ணு யிரவமண் மரமேறி யழிந்தது
வாயில்லா பூசலார் மௌன சாகரமுற்றார்
ஏயர்கோ னலம்பெற் றினிய சாகைபெற்றார்

எத்தனையதிகார மெத்தனை மதிகோர மெத்தனைவ்யாபாரம்-சிவசிவா (எ
இத்தனையுஞ் சகித்து யேழையுடம்பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெந்நாட் செப்புவாய் மாமஹேசனே (௪௨)

தலைமீன் சலத்தில்விட்டு தன்பணி யாற்றினர்
மலைவாய்ச் சூதிஞூதிய வயத்தா னிலைவாய்ந்தனர்
உலைச்சூழ் சமரில்நீற்றை யுகந்துகாட்டி மடிந்தார்
இலகு மும்மையில்மூர்த்தி யெழிலர சாண்டனர்

எத்தனையதிகார மெத்தனைமதிகோர மெத்தனை வ்யாபாரம்-சிவசிவா (எ)
இத்தனையுஞ் சகித்து யேழையுடம் பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெந்நாட் செப்புவாய் மாமஹேசனே (௪௩)

திருநாளைப் போவாரின் தேகந்தீக் கனியாச்சு
திருவள்ளுவரின் யாக்கை செழும்பொன் னதுவாச்சு
ஒருநாளு வினையாத வொதியன் பொதிக்குழைத்து
இருவினைக் கீடாகியிறைஞ் சுஞ்சிவப்பிர காசனுக்கு

எத்தனையதிகார மெத்தனைமதிகோர மெத்தனை வ்யாபாரம்-சிவசிவா (எ)
இத்தனையுஞ் சகித்து யேழையுடம் பெடுத்து யெளியக்கோலம் படைத்து
சித்தமொருமித்து பத்திசெய்வதெந்நாட் செப்புவாய் மாமஹேசனே (௪௪)

——)§(——

## எல்லாஞ் சிவமயமென்றெண்ணி யேத்தல்.

### துணை நினைமாலை.

—)§(—

**வெண்டூப்பியக் கலித்துறை.**

ஒளிகிள றுலகமு மவையுள சீவர்க ளூற்றநோக்கி
வளிகிள ரவைக்கெலா முயிரெனுஞ் சிவனு யமர்ந்திடலான்
களிகிள ரதன்வலி யளரினி லொழிவஃதென் றுங் காட்சியே
தளிகிள றொளிசிவ மயமென பணிநிட்டையிற் றலைழக்குமே

## வண்ணச்சந்தம்.

### ஆறடிமேல் ஈறடிவைப்பு.

——()——

கருணாகர வருணோதய கர்த்தன் மாப்பிரசித்தன்
கடனாசவர் துடல்கொண்டலைக் கடத்தேநிறைக் கடவுள்
அருமாமறை யமரர்முனி வராப்த ரன்பர்களும்
அரவோம்ஹர சிவவோம்சிவ ஹரவோமெனவெஞ் ஞான்றும்
இருவாதனை யவையொன்றுமின் றின்றிச்சுக வழிகண்
டேத்திமலர் சாத்தியேபண் சாற்றித்துதி போற்றி
எல்லாஞ் சிவமயமே சிவமயமே சிவமயமென்
றின்புற்றிரு அன்புற்றெழு யென்றும்ஈசன் துணையே. (௧)

மதுமாமலர் மணமுமதன் வயமேயொழுகு நறவும்
மனமோய்ந்தொரு நிலைகொண்டவ ரிடமேநிறை தவமும்
இதயமெனு நிதியாலய மிடங்கொண்டிடு முருவு
மெவைமாறினு மெவைமீறினு மெவைக்குமுள் தரியா
எதிருக்தமொன் றெனனுமிலா தெங்குந்தங்கும் பரமா
யிவையொன்றென மறைநன்குய ரெழிலோர்ப்பழி யிலரால்
எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
றின்புற்றிரு அன்புற்றெழு யென்றும் ஈசன்துணையே (௨)

ஆதித்தன்முன் பனியானது வடங்கி யொடுங்குதல்போ
லளவின்றியே செயுமாய்கையு மறிவாஞ்ஞான மதன்முன்
சாதித்திட வகையும்வலித் தாராதனு பவமாய்ச்
சாதுக்களு மோதித்தர வேதக்கருத் ததுவாய்
எதுற்றினும் வேதைக்கெடு மெரிமுன்புழு வாகு
மிவையாய்ந்தவர் தவமாய்ந்தத னுவமைநவ மடைந்தார்
எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
றின்புற்றிரு அன்புற்றெழு யென்றும்ஈசன் துணையே (௩)

புடங்கொண்டிடும் பொன்னானது புகழும் மதிப்புறுமார்
புத்தியது நிலைக்கொண்டிடிற் பொருந்தும்பக்தித் திருந்தும்
அடங்கொண்டிடு மயலானவை யழியுஞ்சன்ம மொழியு
மல்லால்வெறுஞ் சொல்லாலிலை யெல்லாம்வெளி மயக்கே
இடங்கொண்டிடு மரவமென பிச்சைபல லச்சை
யென்றுமிட ரதனைத்தரு மெனமுத்தர்விட் டகன்றார்

எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
றின்புற்றிரு அன்புற்றெழு யென்றும் ஈசன் துணையே. (௪)

புலனோய்ந்தவர் நிலையாய்ந்தனர் பொறையாநெறி யுடையார்
பொய்மெய்யெனு மிருவாதனைப் புறத்தேதள்ளுந் திறத்தார்
சலமீதெழு மலையோய்ந்திடு மெனவெண்ணிடுஞ் சழக்கன்
றனையொப்பவன் வினையுய்ப்பவன் மனநொய்ப்படுஞ் சினத்தன்
இலவம்பஞ் சனலிற்படு மின்னலெனுங் கொன்ன
லேழைமனக் கோழைவினைப் பேழையெங்ங னுணர்வேன்
எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
றின்புற்றிரு அன்புற்றெழு யென்றும் ஈசன் துணையே. (௫)

சசியின்முன்னம் மின்னும்புழு சரிகட்டுவ திலைபோற்
றபத்தோர்முன்னம் விபத்தேசெயுஞ் சண்டாளனென் செய்வேன்
பசியற்றவர் ருசியற்றவர் சுசியற்றவர் நிசமாய்ப்
பரமார்த்தமெய் நிலைநின்றவர் பார்த்தா ரறம்பூர்த்தார்
இசையுற்றவர் நசையற்றவர் பசையற்றவர் வசமா
பிலைகாய்க்கனி யுணுஞ்சாதன யெழிலால்வழி யடைந்தார்
எல்லாஞ்சிவ மயமேசிவ மயமே சிவமயமென்
றின்புற்றிரு அன்புற்றெழு யென்றுமீசன் துணையே. (௬)

அஞ்சம்பகை யஞ்சும்வகை யைந்துந்தொழி லைந்து
மதியக்கர மதிரூக்கும மவையுட்படு தவமே
விஞ்சும்படி வீஞ்சைக்கொடு மிஞ்சுநெறி மிஞ்சி
வேதைக்கொடு வாதைக்கெடு போதைத்தொடு மேதை
எஞ்சும்வழி கெஞ்சிப்பழிக் கஞ்சியெழிற் செஞ்சொ
லிதமாகவே பதம்போற்றிட லதஞ்செய்மத மொதுங்கும்
எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
றின்புற்றிரு அன்புற்றெழு பென்றுமீசன் துணையே. (௭)

கடுமாமதஞ் சுவோதனைத் தொடவேவரு மிடராற்
கலைந்தேமதி குலைந்தேநிலை தளர்ந்தேயலைந் துழன்றேன்
கொடுவெஞ்சலூ ழடரவதன் றிடமேநட மிடுமிக்
கொடியன்பவ மிடியன்பொதித் தடியனிழி நடையன்
இடுவோர்வாயி லதைக்கார்த்திருந் திடும்பிச்சையுண் டிறவா
திருப்பேனையேன் இருத்திவைத்தா லிதனுற்பய னென்கொல்?
எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
றின்புற்றிரு அன்புற்றெழு யென்றுமீசன் துணையே. (௮)

சனனம்பல பலவந்திடுந் தாயி னுசரவழித்
  தானின்றியே தனியாகவந் திலரென்பது சத்தியம்
மனனஞ்செயு நல்லோரெனு மஹனியர்க ளாப்தர்
  மனிதாதிய ருருவாய்ந்திடுங் கன்மதன்ம வழியே
இனமொன்றிலா பிறைவன்சிவ னென்பானிவன் பிறந்தா
  விறந்தானென மொழிகேட்டிலா தன்னநிலை யாய்ந்தால்
    எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
    றின்புற்றிரு அன்புற்றெழு மென்றும் ஈசன்துணையே. (௯)

அதிரூபருக்கும வட்சர வநர்தாதி பூதமுட
  னந்தரங்க பஹிரங்கமென் றரையும்பல மொழியில்
மதியும்விதி யெனவேயுரை வெழுந்துயர்க் களமு
  மன்னுமுயர் மின்னும்பவந் தன்னுமிட ருன்னும்
எதிரிற்படும் பொருளியாவுமிங் கிறக்கும்பழி சிறக்கும்
  எவைவந்தமெ னெவைப்போயினெ னெமன்முனெனயிலையும்
    எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
    றின்புற்றிரு அன்பிற்றெழு மென்றும் ஈசன் துணையே (௰)

அறக்தானவைப் பெரிதானதென் றறிந்தோர் சதாமுடித்தா
  ரவையிற்சிறி ததுங்கற்றிலா வனியாயத்தி லலைவேன்
துறந்தாரெலா மிறவாமலு மிறந்தாலினிப் பிறவா
  துரியாதீத சுழுச்சியதிற் றூக்காமலே தூங்கி
இறந்தாரெனு மொழியின்றியே பியமநிட்டை யதனு
  லென்றுமொரு படித்தா யிருப்பவரே சிவமுத்தர்
    எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
    றின்புற்றிரு அன்புற்றெழு மென்றும் ஈசன் துணையே. (௰௧)

சிவமென்னுமுன் றெழுத்தானதே திரிமூர்த்திக ளெனவே
  செப்பும்அயன் ஹரிருத்திரன் தேவர்க ளொன்றுவர்
தவத்தாலிதை யறிவதல்லாற் சதுர்வித சாதனையுந்
  தனைக்கொண்டவர் ஞானப்படி தன்னிலறிந் துணர்வார்
இவனேபிறந் திவனேசுகித் திறந்தார் கணக்குளதோ ?
  இதைசற்றுநீ நினைத்தாயிலை யெண்ணிலுண்மை விளங்கும்
    எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
    றின்புற்றிரு அன்புற்றெழு மென்றும் ஈசன்துணையே. (௰௨)

முனைக்குமல ரவைவேண்டுவர் மனமில்லதோர் மலரை
  மனங்கொள்ளுவ ரிலையென்பது மாயமொழி யல்லவே

பிணக்கென்பது யுளதேலதிற் பிழையென்பதே நிலைக்கும்
பிரபஞ்ச வாழ்க்கையினுமுயிர்ப் பேசாதவை யொழியும்
இணக்கமறிந் திணங்கானல மெல்லாம்பாழாய் முடியும்
இதையல்லவென் றெவரோமறுத் திடுவாரிவை யவமே
எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
றின்புற்றிரு அன்புற்றெழு யென்றும் ஈசன் துணையே. (௧௩)

சிந்தாகுலந் தனைத்தீர்த்தருட் செழுஞானம்வந் துதவுஞ்
சிவயநம வெனவேசதா போற்றி வெண்ணீறணிந்து
பந்தமெனுங் கன்மவினைப் பற்றுதகற் றவத்தார்
படருஞ்சன்மக் கொடியானதைப் பணிக்காமலே துணித்தார்
எந்தையென சிந்தைசெய்வோர்க் கென்றென்றும் புகழதே
எவைவேண்டினு மவையேதரு மிறையவனெம் பெருமான்
எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
றின்புற்றிரு அன்புற்றெழு யென்றும் ஈசன் துணையே. (௧௪)

உடலானதி லுயிராயிருந் துளகான்வரை யொளித்து
வுள்ளதிது வெனக்காட்சிதந் துறவாடிபி னழுவி
திடமானதிவ் வழிசென்றடைந் தனவென்றறி தற்கிலா
செயலானதை சிவேஸ்வர ரறிந்தவைக்கு ளொடுங்கி
இடமாகு நிட்டையி லுட்பட யென்றுமொரு படித்தா
யிருந்தாரவ ரெல்லோர்க்கிசைந் திடுமோ ? நிசப்படுமோ ?
எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
றின்புற்றிரு அன்பிற்றெழு யென்றும் ஈசன் துணையே (௧௫)

அருளே பழுத்தவர்க ளென்று மன்பே சருவமென
ஆசித்தனர் பூசித்தனர் நேசித்தனர் ஞான்றுந்
தெருளேபழுத் தவர்களுண்மைத் தெளிந்தார் மனங்கனிந்தார்
சிவஞானமே பழுத்தக்கனித் தின்றார்நிட்டையி னின்றார்
இருளேபழுத்திடி லூழ்வினை யிடரானதுந் தொடரு
இதனூற்சுக மிலையென்பதை யெவரோ மறுத்திடுவார்
எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
றின்புற்றிரு அன்புற்றெழு யென்றும் ஈசன் துணையே. (௧௬)

நலமொன்றிலாச் செயற்செய்தனை நாய்க்குங் கேடதாக
நலிந்தாய்மதி குலைந்தாயெங்கு மலைந்தாயுடல் வளர்த்தாய்
குலமுங்குணங் குறியொன்றிலா கோதற்ற நாதருக்கு
குறைகூறினை நெறிமாறினை வெறியேறினை நல்லதோ ?

இலைபோற் பறந்திகோள்வரு மென்செய் தொழிந்திடவோ
வினியாகிலுஞ் சிவப்ரகாசன் மொழிகேட்டித மடைவாய்
எல்லாஞ்சிவ மயமேசிவ மயமேசிவ மயமென்
றின்புற்றிரு அன்புற்றெழு வென்றம்பசன் றுணையே (௰௭)

——()——

## பரமசிவமாலை.

——()——

### காப்பிய கலித்துறை.

வரமெலாந் தரும் வள்ளலெம் பெருமான் வனசமலர்
சரண மடைந்தென்றுஞ் சாகா நிலைப்பெற்ற சற்குணத்தர்
அரஹர சிவசிவ வெனஞான்றும் போற்றி யருளடைந்த
பரமசிவமே நலம் பணித்தாளெனப் பணிசெய்வமே.

——)§(——

### எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பண் - கோழிப்பு.

—)§(—

எங்கு நிட்களமாக வென்ற நித்தியமான சிவமே பரமசிவமே
இதயமெனுங் கோயிலி லென்ற கடம்புரியுஞ் சிவமே பரமசிவமே
நிட்கட் கங்கை மங்கையுந் திகழு மானந்தரூப சிவமே பரமசிவமே
தினகர வொளியான தேவே தேவர்கடேவே சிவமே பரமசிவமே
தங்கும் பேரறிவினு டழைக்குந் திவ்ய மகத்தவ சிவமே பரமசிவமே
தாய்த்தந்தைசன்மகன்மர் தாமொன்றுங் கிடையாத சிவமே பரமசிவமே
மங்களா கரமான மாமயிலை வாசனே சிவமே பரமசிவமே
மாமஹேசனே கபாலீசனே மலர்த்தாட் சரண் சிவமே பரமசிவமே(௧)

இகபர சுகமெல்லா மீந்தருட் கருணை மன்னுஞ் சிவமே பரமசிவமே
எல்லாங் கடந்த மஹனிய ரிருதயம் வாழுஞ் சிவமே பரமசிவமே
பகரரிய மெய்ஞ்ஞானப் பாலுண்டோ ருள்மணக்குஞ் சிவமே பரமசிவமே
பாரனைத்து நிறைந்து பகலோ னிரவோனுகுஞ் சிவமே பரமசிவமே
அகல்கனிந் தன்புபக்தி யகலா தன்பர்துதிக்குஞ் சிவமே பரமசிவமே
அண்டபிண்ட மனைத்து மாக்கியாண் டழித்திடுஞ் சிவமே பரமசிவமே
மகத்துவ வுருகொண்டு வணங்கினோர் முன்வந்தாண்ட சிவமே பரமசிவமே
மாமஹேசனே! கபாலீசனே! மலர்த்தாட் சரண் சிவமே பரமசிவமே()

அருளானந்தத் தொழும்ப சகலாதன்பிற்குட் காணுஞ் சிவமே பரமசிவமே
அன்னைதந்தைசற்குரு அனைத்துமாய் நின்றலாவுஞ்சிவமேபரமசிவமே

இருளான மூப்பசைபி விபேக்கன் மேலைத்தக்கார்க்குஞ் சிவமே பரமசிவமே
எழைப்பர தேசிமே விதம்பிவைக் தானவேண்டுஞ் சிவமே பரமசிவமே[மே
பொருளல்லாத விற்றப்பொருளாய் மலைத்துக்கெட்டேன் சிவமேபரமசிவ
புத்திகில் நிற்காதுப் போனவழி யலைந்தேன் சிவமே பரமசிவமே
மருளா மயக்கத்தாலும் மனப்பேயினு லலைந்தேன் சிவமே பரமசிவமே
மாமஹேசனே ! கபாலீசனே! மலர்த்தாட் சரண் சிவமே பரமசிவமே()

ஐவராட்ட மொடுங்கி லனைத்து மொடுங்கிப்போகுஞ் சிவமே பரமசிவமே
ஆனந்தம் பரமானந்த மானந்தஞ் சிவானந்தமாஞ் சிவமே பரமசிவமே
பொய்யிலா மனத்திலே பூர்த்திமணக்கும் பூவே சிவமே பரமசிவமே
புகலரிய மெய்ஞ்ஞான போகந்தந்து வாட்கொளுஞ் சிவமே பரமசிவமே
மெய்யாமுன்மையைகண்டுமெய்யார்தேகத்தில்வாழுஞ்சிவமேபரமசிவமே
விஞ்சையினற் சஞ்சஞ்சூடி மஞ்சருவாய்த் தொண்டர்ப்பாடுஞ் சிவமே
வையகமாயைவிட்டோர்மறவாதென்றுங் கொண்டாடுஞ் சிவமேபரமசிவமே
மாமஹேசனே! கபாலீசனே! மலர்த்தாட் சரண் சிவமேபரம சிவமே()

அனந்தரூபமதாகி வடியார்முன் காட்சிதந்த சிவமே பரமசிவமே [சிவமே
அழுதானந்தக் கண்ணீரா லர்ச்சனைச்செய்தோர்க்காளுஞ்சிவமே பரம
சினந்தவிர்த்தப் பெரியோர் சிந்தித்து வந்திக்குமெய்ச் சிவமே பரமசிவமே
செய்கையுஞ் சிந்தையுஞ் சேர்ந்தொன்றானவர்பணி சிவமே பரமசிவமே
கனக்குலைந் தொழியுநாட கார்த்திட வேண்டிநின்றேன் சிவமே பரமசிவமே
கல்லாதவ னுன்வெகுப் பொல்லாதவன் றெரிவாய் சிவமே பரமசிவமே
மனந்தடு மாறிடாமல் வகுத்த சாதனைத்தந்தாளுஞ் சிவமே பரமசிவமே
மாமஹேசனே ! கபாலீசனே ! மலர்த்தாட்சரண சிவமே பரமசிவமே

எந்தா யெந்தாயென்று யேங்கியழுதுக் கூப்பிட்டேன் சிவமே பரமசிவமே
ஏனென்றையோ கேளாமலிருப்பதுங்கருணைதானோ சிவமேபரமசிவமே
சுந்தரச்சோதியனே ! சூட்சும தேகவைபோக சிவமே பரமசிவமே
தொல்லை யகலும்வழி சொல்லிற் பிழைத்திடுவேன் சிவமே பரமசிவமே
சிந்தை நிலைநிற்காது சென்மங் கடைத்தேறுமோ சிவசே பரமசிவமே
சித்திரம் பேரலசையா சித்தசுத்தந் தந்தாளுஞ் சிவமே பரமசிவமே
மைந்தனியான் றந்தைநீயே வசனித்தாலென்னலாபஞ்சிவமே பரமசிவமே
மாமஹேசனே! கபாலீசனே! மலர்த்தாட்சரண் சிவமே பரமசிவமே(சு)

ஐந்துபர மைந்துருவ மைந்துநாம மைந்தக்கர சிவமே பரமசிவமே
அப்புமண் தேயுவாயுவு மாகாச மைந்தாகிநின்ற சிவமே பரமசிவமே
சிந்தையறி யார்க்கிதனைக் செப்பிடிற் குதர்க்கமாகுஞ் சிவமே பரமசிவமே
தேடி புகழைச்சதா பாடிநாடினோர்க்கின்ப சிவமே பரமசிவமே

சொக்குழன்றே னல்லாது நோன்பொன் றமேயறியேன் சிவமே பரமசிவ
நோய்செநண்ட தேகம்பெற்று வாய்மதங் கொண்டழிந்தேன் சிவமே
வந்தனஞ்செய் சிவப்ரகாசன் றதிக்கிதங்குஞ் சிவமே பரமசிவமே [பரம
மாமஹேசனே! கபாலீசனே! மலர்த்தாட்சரண் சிவமே ப்ரமசிவமே.

விண்ணப்ப நிலைகலித்துறை.

சகல சம்பூரண சச்சிதா னந்த சதோதயனி
னகமகிழ்ந் தருட்செய நாற்பத்தேட் டாண்டு னடியிணைமேற்
புகழ்வரு டத்தொரு புதுகவி மலர்ச்சூடிப் போற்றிநின்றேன்
மிகநல மருவிட யென்றென்று தரித்தருள் விண்ணப்பமே. (௧)

அடியாரெனு மன்ப ருடன்கூடி நின்பணி யாற்றிநின்றேன்
குடிமுழு தாண்டு னநுக்ரஹஞ் செய்தருட் குணமருவி
மிடியெலாம் போக்கி மெல்லடிக் காட்கொண்டால் மிகுபுண்ணியம்
கடிமல ராற்கவி சூடினேன் றொண்டரைக் கார்த்தருளே. (௨)

## போற்றித் தேவாரம்

அத்தனே! யமரர் வாழ்வே! யகண்டிதா கார மூல
வித்தகா! விபுத ரேத்தும் விமலனே! விகிர்தனே மெய்க்
கர்த்தனே! கபாலீசக் கங்கை வேணியனே! சிர்சா
லுத்தம ஞான முன்னு மோம்நமோ நமோ நமஸ்தே. (௩)

## வாழி விருத்தம்.

பருதியென வொளிநில வைங்கரவோம் விநாயகன்முட்
பரமகிருபா கரன்ஸ்ரீகபா லீசன் கபாலியுமை
குருகுமர வள்ளல்மங்கை யிருவர்சைவ சமயக்
குரவரெனு நால்வர்களுந் திருத்தொகை சேரடியார்
விருதுமயங் குலவுத்திரு நீறக்கமு மயில்வேல்
மெய்ப்புலவர் மயிலைவாழ் விபூதரும் வலஞ்செய்வோர்
திருதியெனவே யிந்நூற் குதவிசெய் கண்ணியரும்
திருப்பணிசெய் பவரிம்மாலை செகமெலாம் வாழியவே.

திருமயிலை ஸ்ரீ கபாலீச்சுரரின் நாற்பத்தேட்டாவது வருடத்திய
சிவஞானபரோட்சசுகார்ஜிதம்
ஸமாப்தம்
ஓம் நமப்பார்வதிபதயேநம; ஹரஹரமஹாதேவ ஓம் திருச்சிற்றம்பலம்

ஜெகநாதபுரம்
அ. கா. இரங்கசாமி பிள்ளை
கல்கத்தா பவானிப்பூர்
ஸ்ரீ கணநாத சபை
ஸ்தாபகர். கி. ச மாதவதாஸ்
கோ. கோதண்டசாமி பிள்ளை
பெ. கிருஷ்ணசாமி பிள்ளை
வீ. ச. முனிசாமி பிள்ளை
க. ந. வீ த பெருமாள் பிள்ளை
பா வசாம்பரம் பிள்ளை
பெ தம்புசாமி தாசர்
வீ. மு. தெருவீதி பிள்ளை
பிரம்பூர் ஏகாந்தவீதி
R. M. முனிசாமி பிள்ளை
கருக்காத்தம்மன் கோவில் வீதி
ஸ்ரீ சிவத்யான பஜனை ஸ்தாபகர்
வீ. நா. இராகுவேல் பிள்ளை
டாக்டர் சாமிநாய்க்கன் வீதி
N. ஆளவந்தார் தாசர்
வ. குமாரசாமி பிள்ளை
செம்மநகர் கி. வெங்கடாசலம் பிள்
வீ. சண்முகம் பிள்ளை [ளை
கீழ்ப்பாக்கம் மேட்டுவீதி
ஸ்ரீ சிவானந்த பக்த பஜனை
ஸ்தாபகர் பொ. வ. மதுரைபிள்ளை
மூப்பர் பெ. மு. பாலையம்பிள்ளை
" ஆ. செ. பொன்னப்பன் பிள்ளை
உபாத்தியாயர் சம்பிரதி
சோதிடர் செ. ப. சந்திரகாசம் பிள்
ஆலோசனைத்தலைவர் [ளை
செ. நா. இராகுவேலு பிள்ளை
விசாரணைத்தலைவர்
கு. ச. முனிசாமி பிள்ளை
தண்டல் செ. நா. கதிர்வேலுபிள்ளை
பிள்ளை மு. குப்புசாமிபிள்ளை
கோட்டிமாநகர்
B. திருகாஜலம் பிள்ளை
T. M. வேலு பிள்ளை
அமிஞ்சிகரை சே. முனிசாமி தாசர்
ஸ்ரீ விநாயக மஹோத்ஸவ சபை
மூப்பர் சே. மு. தம்புசாமி பிள்ளை
காரியதரிசி இரா. தருமலிங்கம்பிள்ளை
அங்கம் ந. சே. சுப்ரமணியம்பிள்ளை
அங்கம். மு. தங்கவேலு பிள்ளை
சேத்துப்பேடு
ச. மு. சிங்காரவேலு பிள்ளை
ச நாராயணசாமி பிள்ளை
அ. எதிராஜலு பிள்ளை
கு. வீ. சுப்ரமண்யம் பிள்ளை
சி. தருமலிங்கம் பிள்ளை
செ. அ. தங்கவேலு பிள்ளை
திரு. கி. மா வே. கு. நடராஜ மூர்த்
கன்னிமாநகர் [தி
விஜய பெ. ஆ. முருகேசம் பிள்ளை
ந ஜான் திருவையா பிள்ளை
ஜோ. அந்தோனி பிள்ளை
பெ. இரத்தினவேலு தாஸ்
C. முனிசாமி பிள்ளை
கி. ச. மு. நத்தானியேல் பிள்ளை
M. முருகேசம் பிள்ளை
பொன்னுநகர்
ஸ்ரீ சிவசுப்ரமண்ய தியானபஜனை
கிராமம்வெ. பா. முருகேசம்பிள்ளை
இர. பொன்னுசாமி பிள்ளை
து. விஜயராகவலு பிள்ளை
அ. குழந்தைவேலு பிள்ளை
ப. எல்லப்பன் பிள்ளை
ஆற்காடு மு. மதுரை பிள்ளை
அ பி ஆரோக்கியசாமி பிள்ளை
ஸ்ரீ பாலசுப்ரமண்யாலயம் [ள்ளை
உபகாரியதரிசித்திரு ம. அப்பாசாமிபி
சென்னை பிரஜாநுகூலசங்கம்
காரியதரிசி த. சின்னையா பிள்ளை
S. M. S. நாராயணசாமிபிள்ளை
சி நல்லதம்பி பிள்ளை
ச மு எல்லப்பன் பிள்ளை
நுங்கம்பாக்கம் கிராமவீதி
பெ. மா. அருணாஜலம் பிள்ளை
தி. சுந்தரம் பிள்ளை
கோண்டிமாநகர்
கி. வீ. செ. தாமோதரம பிள்ளை
அமீர்நகர் ச. முருகேசம்பிள்ளை
சாலைதேவனுப்பேட்டை
இரா. அ. சண்முகம் பிள்ளை
A. தம்புசாமிபிள்ளை
P. நடராஜன் பிள்ளை

P. முனிசாமி பிள்ளை
P. முனிசாமிபிள்ளைஐஸ்மெர்சன்ட்
சி. கோவிந்தராஜுலு பிள்ளை

வன்னியதேவனும்பேட்டை

பொ. முருகேசப் பண்டிதர்
M. அந்தோனிபிள்ளை
நல்லான்பதி ப. முனிசாமி பிள்ளை
ஸ்ரீ கற்பக விநாயக பக்த பஜனை
ஸ்தாபகர் அ. அண்ணாமலைபிள்ளை
காரியதரிசி சு. முருகேசம் பிள்ளை

வேளாளத்தேவனும்பேட்டை

மு. மு. துரைசாமி பிள்ளை
R. முனிசாமி பிள்ளை
வ. முனிசாமி பிள்ளை

ஆமிரந்தீபநகர்

R. தம்பியப்பன் பிள்ளை
K V வீரராகுபிள்ளை
கல்கத்தா ஸ்ரீசித்திவிநாயகபஜனை
ஸ்தாபகர்S. P. இராவணன்பிள்ளை

துலுக்கன்தோட்டம்

L. S பிரான்சீஸ் பிள்ளை
மக்கிமாநகர் ஏ வீராசாமி பிள்ளை
” கே. வீ. சபாபதிபிள்ளை
மக்கியாநகர்ஆம்ரூர்ஸ்ரீசிவப்ரகாச
சித்திவிநாயக பக்த பஜனை
ஸ்தாபகர் வீ. ஐயாக்கண்ணுபிள்ளை
மூப்பர் அ பொன்னரங்கம பிள்ளை
தண்டல் இர. பொன்னுசாமிபிள்ளை
பிள்ளை மு. குப்புசாமி பிள்ளை

மவுண்ட்ரோட் ஜெசன்ஸ்வீதி
ஸ்ரீ சிவப்ரகாச சுந்தரஞான
பக்தாமிர்த பஜனை ஸ்தாபகர்

கிராமம் ஏ. மா. தங்கவேலு பிள்ளை
உபாத்தியாயர்பெவரதராஜுலுபிள்ளை
மூப்பர் மா. முருகேசம் பிள்ளை

தர்மகர்த்தர்

சோதிடர் கா. சி. முனிசாமிபிள்ளை
காரியத்தலைவர் இர. சிதம்பரம்பிள்
உபநாரியத்தலைவர் [ளை
மு. வரதராஜுலு பிள்ளை

ஆலோசனைத்தலைவர்

ந. ஐயாக்கண்ணுபிள்ளை [ள்ளை
பொக்கிஷர் மா. பொன்னுசாமி பி

ஸ்ரீசிவசன்மார்க்க திருப்பணி
பரிபாலனசபை

ஸ்தாபகர் சா. சிங்காரம் பிள்ளை

ஆலோசனைத்தலைவர்

பொ. மு. மதுரவாசகம் பிள்ளை

கிருஷ்டப்பசெட்டிவீதி ஸ்ரீ பால
சிந்தாமணி விநாயக பக்த பஜனை

ஸ்தாபகர் பெ. சின்னசாமி பிள்ளை
காரியதரிசிபொ முருகேசம்பிள்ளை
உபாத்தியாயர்சி சுப்ரமணியபிள்ளை

ஆல்தோட்டம்
ஸ்ரீ சிவகணேச பக்த சபை

அழர்நகவி இரா. பொன்னுசாமிபிள்
வீ. வடிவேலுபிள்ளை [ளை நீலகிரி
க தம்பியப்பன் பிள்ளை
ஏ, இராஜகோபால் தாசர்
செ. மாணிக்கம் பிள்ளை
மு. காளி பிள்ளை
தி. வாசுதேவ மூர்த்தி
வி. ஏ. சுப்ரமணியம் பிள்ளை
பெ. வீரராகவலு பிள்ளை
ப. சதானந்தம் பிள்ளை

ஸ்ரீ நடராஜ பக்த பஜனை

பொ. மு, நடேசபிள்ளை என்கிரே
மு. கிருஷ்ணசாமி பிள்ளை [வர்
மா உலகநாதம் பிள்ளை
ஷியூர் அ. பொன்னம்பலம்பிள்ளை
சப்ளையர் ஏர்தூர் ப. முனிசாமி பி
சி. மு. நாராயணசாமிபிள்ளை [ள்ளை
ஐ. மா. தங்கவேலு பிள்ளை
ஏ. வீ. முனிசாமி பிள்ளை
து. சருமலிங்க மூர்த்தி
பா. கணேசன்பிள்ளை

இராயப்பேட்டை

இல. இர. முருகேசம் பிள்ளை
ச. இர கணபதி பிள்ளை
R. D M ஐயர்

ஸ்ரீ சிவப்ரகாச பக்த பஜனை

திண்டிவனம் கொள்ளாற நெய்குப்
பம்ஸ்ரீ சிவப்ரகாச சித்தி விநாயகர்
ஆலயம், கல்விச்சாலை, மானேஜர்
ஸ்தாபகர் கோ. பூங்காவனம்பிள்ளை
க. ந. வீ. தம்புசாமி பிள்ளை உரிகம்

காட்டுக்கோவில் சந்தவெளி வீதி
மு. சிராளன் பிள்ளை
P. M. நடேசதாஸ்
தூயப்பேட்டை வீராபெருமாள்வீதி
உபாத்யாயர் மு. முருகேசம்பிள்ளை
(Mechanical Govt.)
வைாகிராபவீதி P. சின்னசாமிபிள்ளை
ஸ்ரீ வல்லாளகணபதி பக்த பஜனை
ஸ்தாபகர் ஆ. வ. இரத்தினசபாபதி
தன்மீகர் A. டேவிட்பிள்ளை [த்தி
மூப்பர் ம. பெருமாள பிள்ளை
குடியேத்தம் M முனிசாமிபிள்ளை
டிமாண்டுவீதி V. R. முனிசாமி பி
அடையாறு வரதாபுரம் [ள்ளை
ஸ்ரீ சித்திகணேச பக்தபஜனை
ஸ்தாபகர் சி. முருகேசம் பிள்ளை
பிள்ளை ம உலகநாதன் பிள்ளை
ஸ்ரீ வேதவிநோத விநாயகபஜனை
ஸ்தாபகர் ந. குப்புசாமி பிள்ளை
மூப்பர் ப. முருகேசம் பிள்ளை
ஆலோசனைத்தலைவர்
வே. கி. வரதராஜலு பிள்ளை
பிள்ளை ம. மதுரை பிள்ளை
" இ. மு. தனவேலுபிள்ளை
வரதாபுரம் வ. வ. சிங்காரம்பிள்ளை
" வே. சண்முகம் பிள்ளை
" பொ. செல்லப்பன்பிள்ளை
" K. ஆண்டவமூர்த்தி
கின்னரவித்வான் பாளையம் பிள்ளை
கோட்டூர்
ஸ்ரீ சுந்தர கணேச பக்த பஜனை
மூப்பர் மு. பத்மநாதம்பிள்ளை
காரியதரிசிவீ இராஜகோபால்பிள்ளை
அர்ச்சகர் அ. இரங்கசாமிபிள்ளை
நாராயணசாமிதோட்டம்
கிராமம் வ. ஏகாம்பரம் பிள்ளை
உபகிராமம் வ. கோவிந்தபிள்ளை
ஸ்ரீ சண்முகானந்த பக்த பஜனை
ஸ்தாபகா ஐ. க மாசிலாமணிபிள்ளை
தன்மீகர் பொக்கிஷர்
M V. சண்முகம் பிள்ளை
காரியதரிசி V. M. இராஜு
சம்பிரதி M. சாமிநாதன் பிள்ளை

ஆலோசனைத்தலைவர்
கு துரைசாமி பிள்ளை
மூப்பர் A. வடிவேலு பிள்ளை
ஸ்ரீ விநாயக மஹோத்ஸவ சபை
மூப்பர் கோ. முனிசாமி பிள்ளை
P. M. சரட்டுபிள்ளை
A. வேலாயுதம்பிள்ளை
இராபர்ட்சன்பேட்டை
ந முருகேசம் பிள்ளை
திருமயிலை வள்ளுவர்பேட்டை
சா. பொ. முருகேசம் பிள்ளை
செ. பெ. இராஜுபிள்ளை
ஸ்ரீ சிவகணேசபக்த பஜனை
ஸ்தாபகர் சா. பொ. கந்தசாமி பிள்
மு. இராஜு பிள்ளை [ளை
கொன்றைமாநகர்
மயிலை வே. பொன்னுசாமி பிள்ளை
" K. C. வெங்கடாசலம்பிள்ளை
வாலாஜாபேட்டை [டர்
அ. அண்ணாமலைதேசிகர் கண்ட்ராக்
மீர்சாயபுபேட்டை
ஸ்ரீ சதுர்த்திவிநாயக சன்மார்க்க
பக்த பஜனைத் திருக்கூட்டத்தார்
நரசிங்கபுரம்
ஸ்ரீ சிவஞான பக்தஜன் சபை
ஸ்தாபகர் பெ. இரத்னசாமி பிள்ளை
காரியதரிசி நா. முனிசாமி தேசிகர்
" 2. கோ. ஏழுமலை பிள்ளை
பொக்கிஷர் வீ. சுப்ரமண்யசிவம்
" 2 வீ. முருகேசம் பிள்ளை
திறவுகோலர் சி. முனிசாமிபிள்ளை
" 2 ஆ. சுப்ரமண்யம் பிள்ளை
சம்பிரதி அ. பொ. இராகவலுபிள்ளை
அர்ச்சகர் மாணிக்கவாசகம் பிள்ளை
ஆலோசனை M. முனிசாமி பிள்ளை
அங்கத்தினர் க முனிசாமி பிள்ளை
தண்டல் பொ கேசவலு பிள்ளை
நரியமாநகர் மு. ஆறுமுகபண்டிதர்
புதுப்பேட்டை
வித்வான் சி. இஷ்டலிங்கம்பிள்ளை
பாலகவி அ. ந. முருகேசம் பிள்ளை
வெ. கங்காதரம்பிள்ளை டிரைவர் S
அ. கதிரேசன்பிள்ளை [I. R.

## கையொப்பக்காரர்கள் நாமதேயம்.

சோ. கந்தசாமிபிள்ளை என்கிரேவர்
ஸ்ரீ ச. செ. மாணிக்கம் பிள்ளை
N. பச்சையப்பன் பிள்ளை
வி. சுப்ரமண்யம் பிள்ளை
A. R. கோபால் பிள்ளை

சிந்தாதரிப்பேட்டை

ஸ்ரீ துயர்தீர்த்த விநாயக ராலயம்
திருப்பணி செ. தருமலிங்கம்பிள்ளை
,, எ. சி. சண்முகம் பிள்ளை
அ. மு. தங்கவேலு சாமியார்

பாலசங்கீத வித்வான்

T. R. தியாகராயபிள்ளை

மேட்டுவீதி

P. சுப்ரமண்யம் பிள்ளை

புளியந்தோப்பு

சா. சின்னமதுரைபிள்ளை
நெட்டால் ஸ்ரீ சித்திவிநாயக
சிம்சாதன தவசங்க ஸ்தாபகரும்

புரசை

ஸ்ரீபாலசிந்தாமணி விநாயகாலய
ஸ்தாபகாதீனருமாகிய சைவ.
திரு சி. வீ. பாலகிருஷ்ணம் பிள்ளை
க. ரியதரிசி சி. வீ. பாபுபிள்ளை

வியாசர்பாடி

ஸ்ரீ சிவஞான சுந்தர சித்விலாச
பக்தபஜனை ஆசிரியர்
புரசை மு. சிவசுப்ரமணயம்பிள்ளை

பெரியமேட்டு

திரு. R. S. வரதராஜலு பிள்ளை
ப. இராகவன் பிள்ளை
பூவை ச. இரங்கசாமி பிள்ளை
மண்ணடி சவரிமுத்துவீதி
திருப்போரூர் வள்ளுவசித்திரத்தின்
தலைவர் செ. அருணாசலம்பிள்ளை
T. மாணிக்கம் பிள்ளை
கடிசமேடு ஸ்ரீசின்மயானந்தபஜனை
மூப்பர் இரா. சுப்ரமண்யம பிள்ளை
ராயபுரம் கயிற்றுகிடங்கு
இந்து பக்த பால்ய சபை
வெ. அர்ச்சுனன் பிள்ளை
செ. சி. பாலசுந்தரம் பிள்ளை
வ. கோவிந்தராஜலு பிள்ளை
வீ. பெருமாள் பிள்ளை
ச. சண்முகம் பிள்ளை
வ. இராகுவேலு பிள்ளை
ஸ்ரீ விநாயக மஹோத்ஸவதலைவர்
வ. கோபால் பிள்ளை
வெடியூர் பு. வே. சாரங்கபாணிபிள்ளை
N. வேசகிரி பிள்ளை
பெ. முனிசாமி பிள்ளை

பிருங்காசைலம்

S. N. வடிவேலு பிள்ளை பர்பாய்
மாரீசன்வீதி மு. கைலாசம் பிள்ளை

டிரைவர் லயின்

சமாச ரத்நாகரம்

C. K. மகேஸ்வரம் பிள்ளை
பூவை மு வீ. பழனிபிள்ளை

செங்கற்பேடு

செ. முருகேசம் பிள்ளை நீலகிரி
காஞ்சீபுரம் சொ. நடேசம் பிள்ளை
உரிகம்கிளப் P. சபாபதி பிள்ளை
குன்னூர் ஜெனரல் சப்ளையர்
கிராமம் S. குழந்தைவேலு பிள்ளை
பண்டிதர் R. நாராயணசாமிபிள்ளை

நீலகிரி

இந்து ஆரியமத சித்தாந்த சபை
மூப்பர் B. சுந்தரம பிள்ளை
சூப்ரடேன்டேன்ட் ஸ்னேடன்
K. M, பாலகுமரு பிள்ளை

ப்ளவர் காட்டேஜ்

B. S ஜெகநாதம் பிள்ளை
நீலகிரி இராயல் கன்பெக்ஷனரி
Y. ஆறுமுகம பிள்ளை
Y. A நாராயணசாமி பிள்ளை
ஷாப்கீப்பர் G R. ஜேம்ஸ்பிள்ளை

நீலகிரி வண்டிசோலை

ஸ்ரீ ராமாநுஜ பக்த பஜனை
ஸ்தாபகர் A. சாரங்கபாணிபிள்ளை
A. S. இராமச்சந்திரம் பிள்ளை
B. S. குருநாதம் பிள்ளை

திருமல்கிரி டேக்கான்

செ. இர. பூ. நமசிவாயம் பிள்ளை

இரங்கோன்

மு. கந்தசாமி பிள்ளை
மு. இரங்கசாமி பிள்ளை





